
உரையும் உரையாடலும்

கலைஞர் மு. கருணாநிதி



உறவும் உரிமையும்

மா. செங்குட்டுவன்
துணையாசிரியர்: 'நம் நா
★ 'அறிவகம்' :: சென்னை-18



கோவை அண்ணு சிந்தனையாளர் பேரவையின் சார்பில்
''உறவும் உரிமையும்'' என்ற தலைப்பில்
டாக்டர் கலைஞர் அவர்கள் ஆற்றிய முழு உரை.

★

அண்ணு சிந்தனையாளர் பேரவை
16/21, சிரியன் சர்ச் பாதை எண் : 2
கோயமுத்தூர் – 641 001.

முதற் பதிப்பு : 1977

3986
கு. 894.8115 ஆ
2ந4

அச்சிட்டோர் :
கயல் அச்சகம்
69, பீட்டர்ஸ் சாலை
சென்னை—600086.

மா. செங்குட்டுவன்
துணையாசிரியர்: 'நம்
'அறிவகம்' :: சென்னை-

எங்கள் பேரவையின் நோக்கம்

தமிழகத்தின் மறுமலர்ச்சிக்காகத் தன்னுடைய எழுத்தாலும், பேச்சாலும், உழைப்பாலும் அல்லும் பகலும் அயராது உழைத்த பேரறிஞர் அண்ணு அவர்களின் பெயரால் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட கோவை அண்ணு சிந்தனையாளர் பேரவை, தொடர்ந்து மொழி, இனம், விஞ்ஞான அறிவு, மக்களின் பகுத்தறிவு வளர்ச்சி ஆகியவற்றின் மேம்பாட்டிற்காக பல பணிகளை செய்துவந்து இருக்கின்றது.

முன்னுள் ஆளுநர் ஆந்திரப் பகுத்தறிவுப் பெரியார் கோரே, தமிழ்ப் பேராசிரியர் சாலை இளந்திரையன் போன்ற பல பகுத்தறிவாளர்கள் கலந்துகொண்ட பட்டி மன்றங்கள், சிறப்புரை நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் உள்பட ''பெரியார் பேசுகிறார்'' என்ற நூலையும் வெளியிட்டு மக்களின் சிந்தனையை வளர்க்கும் பணியை கடந்த காலத்தில் எங்கள் பேரவை நிறைவேற்றி வந்துள்ளது.

விஞ்ஞானத்தின் வியக்கத்தகு வளர்ச்சியைக் கண்டுள்ள இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்திலும், அரசியல், பொருளாதாரம், இலக்கியம், மொழி, ஆகிய பிற எல்லாத் துறைகளிலும் தமிழகத்து மக்கள் எவ்வளவிலும் தங்களது சிந்திக்கும் சக்தியைப் பயன்படுத்த வில்லை என்பது பெரும்பாலும் – அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்து. இந்த ஒரு வருந்தத்தக்க நிலையை மாற்றுகின்ற வகையில் பணிபுரிவது என்பது எங்கள் பேரவையின் செயல் திட்டங்களில் ஒன்று.

தமிழகத்தின் வருங்காலத்தைப் பொற்காலமாக உருவாக்குவதற்கு, தன்னுடைய முழு ஆற்றலையும் திறனையும் – தன்னுடைய வாழ்க்கையையே அதற்காக அர்ப்பணித்து, தன்னுடைய ஓயாத உழைப்பால் – பேச்சால், எழுத்தினாலும் தியாகத்தினாலும் இந்தியத் திருநாட்டின்

வரலாற்றில் ஒரு புதிய சிறப்பு அத்தியாயத்தையே உரு வாக்கி வரும் தமிழக மக்களின் இதய தெய்வம் தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் பேரவையின் 7-வது ஆண்டு விழாச் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு 'உறவும் — உரிமையும்' என்ற தலைப்பில் ஆற்றிய எழுச்சிமிக்க உரை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அடித்தளமாக அமைந்துள்ளது.

அத்தகைய எழுச்சிமிக்க உரையை, பேரவைப் பணியின் தொடர்ச்சியாக, சேலம் மாவட்டம் ஓமலூர் அரசினர் பொறியியற் கல்லூரி மாணவர்கள் நிகழ்ச்சியில் ஆற்றிய சிறப்பு உரையினையும் சேர்த்து ''உறவும் —உரிமை யும்'' என்ற தலைப்பிலேயே நூலாக வெளியிடுவதற்கு எங்க ளுக்கு அன்புடன் அனுமதி தந்து உதவிய தமிழ் சமுதா யத்தின் காவல் தெய்வம் தலைவர் கலைஞர் அவர்களுக்கு எங்களது இதயமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் இதன்மூலம் சமர்ப்பிக்கின்றோம்.

இந்த அழகான — நூலை சிறந்த முறையில், குறுகிய காலத்தில் தயாரித்து, அச்சிட்டு வெளியிடுவதற்கு உறு துணை புரிந்த சென்னை கயல் அச்சகத்தாருக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்,

தலைவர் — மற்றும் நிர்வாகக் குழு,

அண்ணா சிந்தனையாளர் பேரவை

கோவை.

30—9—1977

உறவும் - உரிமையும்

அன்பார்ந்த அண்ணு சிந்தனையாளர் பேரவையினுடைய தலைவர் ஆறுமுகம் அவர்களே, முன்னுள் அமைச்சர் பெருமக்கள் சாதிக் அவர்களே, கண்ணப்பன் அவர்களே, கோவை மாவட்டக் கழகத்தின் செயலாளர் அவர்களே, வாழ்த்துரை வழங்கிய அருமை நண்பர் தென்னரசு அவர்களே, இந்த விழாவிற்கு வருகை தந்துள்ள அன்பிற்குரிய தாய் மார்களே, பெரியோர்களே, நண்பர்களே –

அண்ணு சிந்தனையாளர் பேரவை தன்னுடைய பணியினை தமிழ் நாட்டிற்கும், தமிழ் மண்ணுக்கும் தமிழர்களுடைய உரிமைக்கும் மக்களாட்சித் தத்துவத்தைக் காப்பாற்றுவதற்கும் பயன்படுத்துகின்ற தன்மையில் தொடர்பு கெடாமல், தொய்வின்றி ஆற்றிவருகிறது என்பதை அந்தப் பேரவையின் சார்பாக நடைபெறுகின்ற இந்தச் சிறப்புநிகழ்ச்சியில் நான் கலந்து கொள்வதை ஒரு பெரும் வாய்ப்பாகக் கருதுகிறேன் என் பதையும் எண்ணியெண்ணி புளகாங்கிதம் அடைகிறேன்.

இடையிலே இந்தப் பேரவை சற்றுத் தூங்கியது என்று நண்பர் கள் எடுத்துச் சொல்ல, அதுகேட்டு மனம்பொருத நண்பர் மோகன் அவர்கள் "தூங்கியதற்குக் காரணம் நானல்ல, மிகப்பெரிய இடத்திலே உள்ளவர்கள் அதற்குக் காரணமாக இருந்தார்கள்" (மோகன் ஓராண்டு "மிசா" கைதியாக இருந்தார் என்பது இவ்வாறு குறிப்பிடப்பட்டது.) என்கிற விளக்கத்தையும் சொல்லி, உரிமை பறிக்கப்படுவதற்கு யார் காரணமாக இருந்தார்கள் என்பதையும் இங்கே மிகச்சரியாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

"உறவும் உரிமையும்" என்ற தலைப்பில் இந்தச் சிறப்பு நிகழ்ச்சி யிலே நான் பேசவேண்டுமென்று நண்பர்கள் கேட்டுக்கொண்டார்கள். நான் அவர்களிடத்திலே கொண்டிருக்கிற உறவின் காரணமாக– அவர்கள் என்னிடத்திலே எதிர்பார்க்கின்ற உரிமையின் காரணமாக "சரி அந்தத் தலைப்பிலே பேசலாம்" என்ற ஒப்பந்தம் உருவாகி நான் உங்கள் முன்னுல் அந்தத் தலைப்பிலே பேசுவதற்கு முன்வந்துள்ளேன்.

சிந்தனையாளர் பேரவை என்று பெயர் வைத்திருக்கின்ற நண்பர் கள் இப்படிப்பட்ட தலைப்புகளில் பேச ஒருவரை அழைக்கின்ற நேரத் தில் அப்படிப் பேசுகின்றவர்களுக்குச் சிந்திக்கின்ற ஆற்றல் உண்டா என்று முதலிலே தெரிந்து கொள்ள வேண்டும். சிந்திக்கின்ற ஆற்றல் இருந்தாலும், சிந்திப்பதற்கு நேரம் உண்டா? என்பதை இரண்டாவதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

சிந்திக்கின்ற ஆற்றல் உண்டு என்று ஒத்துக் கொண்ட பிறகு, சிந்திப்பதற்கு நேரம் உண்டா என்று கேட்கப்படுகிற கேள்வியிலேயே அந்த நேரத்தை நாம் அவருக்கு அளித்தாக வேண்டும் என்பதையும் அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும். ஆனால் கோவை மாவட்டத்தில் ஈரோட்டில் வந்து இறங்கிய என்னை நேற்று மதிய உணவு என்கிற பெயரால் நம்முடைய நண்பர்கள் பிற்பகல் ஐந்து மணிக்கு, குட்டப் பாளையத்தில்- அவர்கள் என்னிடம் கொண்டிருக்கிற உரிமையின் காரணமாக – நான் அதற்காகக் கோபித்துக் கொள்ளமாட்டேன், அப் படியே கருணைநிதி கோபித்துக் கொண்டாலும் அந்தக் கோபத்திற்கு கணநேர ஆயுள் தான், அதற்கு மேல் அந்தக் கோபம் நீடிக்காது என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிற காரணத்தால், அந்த நேரத்திலே மதிய உணவை அளித்தார்கள். அதற்குப் பிறகு நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகள், அதன்பின்னர் இரவு ஒரு மணிக்குப் பிறகு ஓய்வு கொள்கிற சூழ்நிலை; பேசவிருக்கிற தலைப்பைப் பற்றி சிந்திக்கலாம் என்று கண்ணை மூடிக் கொண்டு சிந்திக்கத் தொடங்கினேன். காலையில் ஏழு மணிக்குத் தான் எழுந்தேன். இன்று பேச வேண்டிய தலைப்பு பற்றி கனவில் கூட எதுவும் தோன்றிடவில்லை.

காலையில் எழுந்ததும் நண்பர்கள் அழைத்துச்செல்ல காத்திருந் தார்கள். இங்கு பேசிய நண்பர் தென்னரசு, நாற்பது இடங்களுக்கு மேல் கொடியேற்று விழா என்று குறிப்பிட்டார். ஐம்பத்தியேழு இடங்களில் இன்று கொடியேற்று விழா நிகழ்ச்சிகளை முடித்துவிட்டு, அதற்குப்பிறகு நல்லவேளையாக இன்று மதிய உணவு 'குறித்த காலத்தில்' அதாவது மூன்றரை மணி அளவிற்கு (சிரிப்பு) அளிக்கப்பட்டு, அதன்பின்னர் நான்கு மணி அளவில் ஓய்வு கொள்ள நண்பர்கள் எனக்கு அனுமதி தந்தனர். அந்த அனுமதியைப் பயன் படுத்திக் கொண்டு சிந்திக்கலாம் என்று படுக்கையில் படுத்தவாறு சிந்திக்கத் தொடங்கினேன். ஐந்தே கால் மணிக்குத்தான் எழுந்தேன். அதற்குப் பிறகாவது கொஞ்சநேரம் சிந்திக்கலாம் என்று நினைத்தபோது, கதவு தட்டப்பட்டு, நேரமாகி விட்டது என்கிற செய்திகள் தரப்பட்டன உடனடியாக நான் நிகழ்ச்சிகளுக்குப் புறப்பட ஆயத்தமாகி, இதற்கிடையே நண்பர்க கழகம்– மகளிர் மன்றம்– ஆசிரியர் மன்றம் ஆகிய மூன்று நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இப்பொழுது உங்களிடம் வந்திருக்கிறேன்.

ஆக 'உறவும் உரிமையும்' என்கிற தலைப்பில் சிந்திப்பதற்கு எனக்கு நேரம் கொடுக்கப்பட்டதா என்பதை நீங்கள் கொஞ்சம சிந்தித்துப் பார்த்தால் நண்பர்கள் என்னிடம் எடுத்துக்கொண்ட உரிமையின் காரணமாகவும், நான் அவர்களிடம் கொண்டிருக்கிற உறவின் காரணமாகவும் நேரம் தரப்படவில்லை.

ஆனால் எனக்கு இருக்கிற பயமெல்லாம் கட்டணம் செலுத்தி வந்திருக்கிற நீங்கள், 'இந்தத் தலைப்பில் பேசுவேன் என்று தானே

வந்தாய், அப்படிப் பேசாலேட்' ால் கட்டணத்தைத் திருப்பித் தா' என்று என்னைக் கேட்டுவிடுவீர்களோ என்ற அச்சமும் எனக்கு இல்லாமல் இல்லை. நல்லவேளையாக நண்பர்கள் ஐந்தாயிரம் ரூபாய் நிதியை 'டிராப்ட்' ஆக மாற்றி கழக நிதிக்காகக் கொடுத்துவிட்டார்கள். ஆகவே நீங்கள் திருப்பித் தரவேண்டுமென்று கேட்டு, நானும் திருப்பித் தந்துவிடலாம் என்று நினைத்தால் உடனடியாக அதைத் தர ரொக்கப் பணமாக அது இல்லை. அது 'டிராப்ட்' ஆக மாறிவிட்' து. எனவே 'உறவும் உரிமை யும்' என்ற தலைப்பை விளம்பரப்படுத்திய நேரத்திலேயே நீங்கள் எண்ணி இருப்பீர்கள். மத்திய மாநில உறவுகளைப் பற்றியும் மத்தியிலிருந்து மாநிலங்கள் பெற வேண்டிய உரிமையைப் பற்றியும் நான் பேசக்கூடும் என்கிற எதிர்பார்ப்போடு தான் இங்கே நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

உறவு, உரிமை என்கிற இந்த இரண்டு சொற்கள் பல்வேறு நேரங் களில், பல்வேறு நிலைமைகளில், பல்வேறு பொருள்களில் பயன்படக்கூடி யது. உறவு என்பது ஒரு முதலாளிக்கும், தொழிலாளிக்கும் இடையே ஏற்படுகிற நேரத்தில் அதைத் தொழில் உறவு என்று குறிப்பிடுகிறோம். அந்த உறவு எந்த அடிப்படையில் அமைகிறதென்றால், தொழிலாளர்கள் கடமையினைச் செய்து, உரிமையினைப் பெற வாதிட வேண்டும். போரிட வேண்டும் என்ற அடிப்படையிலே அந்த உறவு அமைகிறது. அதேநேரத்தில் சில இடங்களில் தொழிலாளி- முதலாளி உறவு, ஆண்டான் அடிமை என்ற வகையிலே கூட அமைந்துவிடுகிறது. அதை யும் "தொழிலாளி முதலாளி உறவு" என்று தான் சிலர் குறிப்பிடுகிறார்கள், எனவேதான், விழித்துக் கொண்ட பாட்டாளி, "தொழிலாளி- முதலாளி உறவு" சுமுகமாக இருக்க வேண்டுமேயானால், இயல்பான நிலையில் இருக்கவேண்டுமேயானால், அந்த உறவு நிலைக்கவும், உரிமைகள் வென முருமல் இருக்கவும், அதற்குரிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வேண்டுமென்று கருதுகிறான். அப்படி விழிப்புற்ற பாட்டாளிமக்கள் செய்துகொள்கிற ஒப்பந்தங்களின் அடிப்படையில்தான் இன்றைக்கு தொழிலாளி- முதலாளி இருவரிடையே உறவு நிலைபெற்றதாகவும், சில நேரங்களிலே அந்த ஒப்பந்தங்கள் அலட்சியப்படுத்தப்படுமானால், புறக் கணிக்கப்படுமானால் அந்த உறவுகள் நிலைகுலைந்த தன்மையில் இருப் பதையும் காண்கிறோம்.

அப்படி உறவு நிலைகுலைகிற நேரத்தில் உரிமை தலைதூக்கிநிற்கிறது உரிமை தலைதூக்கும் அந்த நேரத்தில் அவை கிளர்ச்சிகளாக வடிவெடுக் கின்றன. அப்படிப்பட்ட உறவும், உரிமையும் எந்த எல்லைக்கோடுகள் வரையில் போய்விடுகின்றன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கத் தவறக் கூடாது.

உறவு நிலைக்க வேண்டுமென்றால் அதற்கு உரிமை முத்திரை குத்தப்பட வேண்டும் என்கிற வாதம், அலட்சியப்படுத்தி விடக்கூடிய வாதமல்ல. ஒரு இளைஞனும், ஒரு இளம் பெண்ணும் தங்களுடைய

இதயத்தை ஒருவர்க்கொருவர் பறி கொடுத்துவிட்டு, அந்த பறி கொடுத்த தன்மைக்குக் காதல் உறவு என்கிற பெயரையும் தந்து, அந்த உறவு பெற்றேருருக்குத் தெரியாமல், உற்ருர் உறவினருக்குத் தெரியாமல் வளர்ந்து கொண்டே போய், அந்த உறவு நீடிக்கலாம் என்று அந்த ஆணே பெண்ணே விரும்பி, அந்த உறவை இழுத்துப்பிடித்துக் கெட்டியாக உறுதிப்படுத்த, அதற்கு உரிமை முத்திரை குத்தவேண்டும் என்று எண்ணு கிருர்களே அதற்குப் பெயர்தான் திருமணம். உறவு என்பது உரிமை முத்திரை குத்தப்படுவதின் காரணமாக திருமணம் என்கிற வடிவம் எடுத்து, அதற்குப் பிறகு ஒருவரையொருவர் பிரிவதென்ருல் கூட அந்த வாழ்க்கை ஒப்பந்தம் உரிமை அடிப்படையில் ஏற்பட்டுவிட்ட காரணத் தால், நீதிமன்றம் வரை சென்ருல் தான் அவர்கள் ஒருவரையொருவர் பிரிந்து தனித்தனியே வாழ இயலும் என்கிற அளவிற்கு, உரிமை கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்து விடுகிறது.

எனவேதான் வெறும் உறவு மாத்திரம் என்று இல்லாமல் உறவு என்பது நியாய பூர்வமாக, உளப்பூர்வமாக, திருமணமே செய்து கொள் ளாமல் கூட ஒரு ஆடவனும், பெண்ணும் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து விடலாம் என்ருலும் கூட, உரிமை முத்திரை குத்தப்படாவிட்டால், இரு வருடைய வாழ்க்கைக்கும் அங்கீகாரம் இல்லாமல் போய், உத்தரவாதம் இல்லாமல் போய் ஆணே அல்லது பெண்ணே துன்பத்திற்கு இன்ன லுக்கு, இடையூறுக்கு ஆளாக நேரிடுகிறது

ஒரு வீட்டிலே இருக்கிற தலைவன், அந்தக் குடும்பத்தின் தலைவன்; தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தன்னுடைய குடும்பத்தின் சொத்துக் களே யாருக்கும் பிரித்து வைக்காமல், அதாவது அவர்களுக்கு உரிமை உடையதாக ஆக்காமல் தன்னுடைய குடும்பத்தில் இருக்கிற அனைவரிட மும் மன நிறைவான உறவோடு பழகிக் கொண்டிருக்கிருன் என்ருலும், அந்தக் குடும்பத் தலைவனிடத்திலே அந்த வீட்டிலே இருக்கிற அத்தனை சொந்தக்காரர்களும், உறவினர்களும், அந்தக் குடும்பத்தலைவனின் வழித் தோன்றல்களும், அவனிடம் மிகுந்த அன்பைக் காட்டிக் கொண்டி ருக்கிருர்கள் என்ருலும் ஒரு நாள் திடீரென்று நோய்ப்படுக்கையில் அந்தக் குடும்பத் தலைவன் விழுந்துவிடுவானேயானுல்- திறமை வாய்ந்த மருத்துவர்கள் இவன் நீண்ட நாள் வாழமுடியாது என்ற செய்தியை அந்தக்குடும்பத்தில் உள்ளவர்களிடம் சொல்லிவிடுவார்களானுல், என்ன தான் உறவு அங்கே கொடி கட்டிப் பறந்தாலும் அத்தக் குடும்பத்திலே இருப்பவர்களுக்கு இவன் மறைந்துவிட்டால் இருக்கின்ற சொத்து யார்யாருக்கு உரிமை என்பதில் ஏற்படுகிற ஆவல் காரணமாக எப்படி யாவது நினைவு இருக்கிற நேரத்திலேயே ஒரு உயிலை எழுதி வாங்கிவிட வேண்டுமென்று அந்தக் குடும்பத்திலே உள்ளவர்கள் எண்ணுகிருர் களென்ருல் அங்கே உரிமை தலைதூக்குகிறது. அதன் காரணமாகச் சொத்து யாருக்கு என்று தெரியாமல் போய்விடும் என்ற கவலை ஏற்படுகிறது

அந்த உரிமையே எனக்குத் தேவையில்லை, அவரே போய்விட்ட பிறகு அந்தச் சொத்தும், அவரால் சம்பாதிக்கப்பட்ட உடமைகளும் எனக்குத் தேவையில்லை என்று கருதுகிறவர்கள் எந்தக் குடும்பத்திலும் மிகமிகக் குறைவாகத்தான் இருப்பார்கள். எனவே நான் இதில் பெரும்பாலானவர்களின் கணக்கை வைத்துக் கொண்டுதான் உங்களிடம் வாதிட விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட நேரத்தில் என்ன தான் உறவு இருந்தாலும் அந்த உறவுக்கு உரியவர் மறைந்துவிடுவார் என்று காலம் நிர்ணயித்த பிறகு அவருடைய உடமைகள் யார்யாருக்கு உரியவை என்பதில் போட்டா போட்டி ஏற்படுகிறது. எப்படியாவது உயிலை எழுதி வாங்கிவிடவேண்டு மென்று எண்ணுகிறார்கள். அது உரிமையின்பால் பட்ட ஒன்றாக இருக் கிறது.

உரிமைகளைப் பெற மூன்று வழிகளை முக்கியமாகச் சொல்லலாம். உறவாடிப் பெறுவது ஒன்று; வாதாடிப் பெறுவது ஒன்று; இந்த இரண்டி லும் அந்த உரிமை கிடைக்காவிட்டால் போராடிப் பெறுவது ஒன்று. முதலிலே போராட்டம் அல்லது வாதாடுதல் என்கிற கட்டங்களை மறந்து விட்டு, உரிமையை உறவாடிப் பெறுவோம் என்று எண்ணி அப்படிப் பட்ட முயற்சியில் ஈடுபட்டு, அதிலே தோல்வி கண்ட பிறகு வாதிடுகின்ற கட்டத்திற்கு வந்து, அதிலும் தோல்வி ஏற்படுமானால் பிறகு அந்த உரிமையைப் போராடித்தான் பெறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

அப்படி உரிமைக்காகப் போராடுகிற நேரத்தில் உறவு குறுக்கிட முடியாது; குறுக்கிடக் கூடாது என்பதற்கு "பகவத்கீதை' கூட சாட்சி யமாக இருந்திருக்கிறது. நான் பகவத் கீதையை இங்கே எடுத்துக்காட் டாகச் சொல்லக் காரணம், எல்லோருக்கும் புரிந்துள்ள ஒரு கதை பாரதம் என்பதால் தான்.

பாரதத்தில் தங்களுடைய உடமைகளை எல்லாம் சூதாட்டத்தில் இழந்து விட்டு– சகுனி என்ற ஒருமாய்மாலக்காரனின் வஞ்சனையால். சூழ்ச்சியால் சூதாட்டத்திலே பாண்டவர்கள் நாடிழந்து, நகரிழந்து, நலன்கள் இழந்து, ஏன் தங்களுடைய மனைவியையும் அடகு வைக்கக் கூடிய அளவிற்கு சூதாட்டத்திலே மனதைப் பறி கொடுத்து, அனைத்தை யும் இழந்து அதற்குப் பிறகு அவர்கள் வனவாசம் சென்று, நிபந்தனைப் படி வனவாச காலம் முடிந்த பிறகு தங்களுக்கு உரிமையுள்ள நாட்டைக் கேட்டு, "நாடு கொடு, நாடு கொடுக்காவிட்டால் ஐந்து பேருக்கும் ஐந்து நகரங்களாவது கொடு, ஐந்து நகரங்களும் இல்லாவிட்டால், ஐந்து பேருக் கும் ஐந்து வீடுகளையாவது கொடு" என்று கண்ணன் தூது சென்று, அதற்கும் துரியன் இணங்காத காரணத்தால் பாரதப்போர் மூண்டபோது காண்டீபன் கண்ணன் தேரோட்ட களத்திற்கு வருகிற நேரத்தில் எதிரே யிருக்கிற தன்னுடைய உறவினர்களை எல்லாம் பார்க்கிறான்; பீஷ்மரைப் பார்க்கிறான்; தனக்கு வில்வித்தை கற்றுத்தந்த துரோணாச்சாரியாரைப்

பார்க்கிருன்; இப்படித் தன்னுடைய உறவினர்கள் எல்லாம் எதிரே பகைவர்களாகப் போர்க்கலன்களோடு போருக்குத் தயாராக நிற்கும் காட்சியினை காண்கிருன். உடனே வில்லையும், அம்பையும் கீழே போட்டுவிட்டு "கண்ணு, நான் போர் செய்ய மாட்டேன், என்னுடைய உறவினர்களை எதிர்த்து" என்று சொல்கிருன். அப்போது கண்ணன் வழங்கிய அறிவுரைக்குப் பெயர் தான் பகவத்கீதை. அந்தப் பகவத் கீதையில் இழையோடுகிற ஒரு கருத்துதான், உரிமையைப் பெற நீ முயற்சிக்கும் நேரத்தில் உறவைப் பற்றி கவலைப்படாதே, உரிமைகளைப் பெறுவது தான் உன்னுடைய முக்கிய கடமை; கீதையின் மைய இழையாக இந்தக் கருத்து தான் இருக்கிறது.

கீதையில் எத்தனையோ வாசகங்கள் வரலாம். "மாதங்களில் மார்கழி நானே, ருதுக்களில் வசந்த ருதுவும் நானே" என்றெல்லாம் கண்ணன் சொல்கிற சொல்லாடல்கள், அவன் எடுத்துக் காட்டுகின்ற கதைகள் இவைகள் எல்லாம் வரலாம். நாம் அந்த மைய இழையை மாத்திரம் எடுத்து வைத்துக் கொண்டு சொல்ல வேண்டுமேயானால் உரிமைகளைப் பறிக்கிற நேரத்தில் உறவு வந்து கண்ணை மறைக்கிறதென்றாலும், அதற்காக கவலைப்படக்கூடாது என்பதுதான் இது ஒரு நாட்டிற்குப் பொருந்தும், ஒரு வீட்டிற்குப் பொருந்துமா என்றால் அது அவ்வளவாகப் பொருந்தாது. ஏனென்றால் வீட்டிற்கு என்று இந்த நிலை ஏற்படும்போது, 'உறவா? உரிமையா?' என்ற கேள்வி எழுந்தால், மனிதாபிமானம் உள்ள குடும்பத்தில் நான் ஏற்கனவே சொன்னேனே, யார்யாருக்கு இறந்து போகிறவனுடைய உடமைகள் என்று பிரிக்க வேண்டும் என்று கருதுகிற குடும்பத்தார் இருப்பார்கள் என்று, அதற்கு விதிவிலக்காக இருக்கின்ற குடும்பங்களில் உறவு தலைதூக்குமேயானால், அங்கே உரிமை இரண்டாவது கட்டத்திற்குச் சென்று, உறவு முதல் கட்டத்திலே நிற்கிறது. அது வீட்டைப் பொறுத்த வரையில். ஆனால் நாட்டைப் பொறுத்த வரையில் பார்க்கும்போது உறவு இரண்டாவது கட்டத்திற்கு செல்கிறது. உரிமை முதல் கட்டத்தில் நிற்கிறது. அது தான் சரியானதும் கூட என்று நான் எண்ணுகிறேன்.

அப்படிப்பட்ட உரிமைக்காக வாதாடுகின்ற - போராடுகின்ற ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவன் நான் என்கிற முறையில் தான் அதையொட்டிய சில கருத்துக்களை உங்களிடம் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்சிகளுக்கிடையே கூட உறவு ஏற்படுவது உண்டு. அப்படிப்பட்ட உறவுகள் அந்தக் கட்சிகள் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்கின்ற வகையிலே ஏற்படுவதுண்டு. அவரவர்களுக்கு இருக்கின்ற கொள்கை உரிமை, இலட்சிய உரிமை, குறிக்கோள் உரிமை இவைகள் எந்தவிதத்திலும் பாழ்படாமல் கட்சிகள் உறவுகளை உருவாக்கிக் கொள்வது உண்டு. அந்த உறவுகள் எல்லாம் ஒட்டுறவா? என்றால் இல்லை;

வெறும் ஓட்டுறவு. ஓட்டுறவுகள் ஓட்டுறவுகளாக இருப்பதில்லை என்பதை நாம் வேறெங்கும் உதாரணம் தேடி அலைய வேண்டியதில்லை; நாமே அதற்கு நல்ல அனுபவசாலிகளாக இருந்திருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட ஓட்டுறவிற்காக உறவு கொள்கிறவர்கள், தேர்தல் நேரத்து உறவுகளுக்காக நம்மிடம் வருகிறவர்கள்; அல்லது இன்னொரு இயக்கத்தோடு அல்லது கட்சியோடு இணைகிறவர்கள். அப்போது தேர்தல் நேரத்தில் வாக்குகளைப் பெற்ற பிறகு அங்கேயிருந்து விலகிவிடுகிற காட்சியினை நாம் பார்க்கிறோம்.

நம்முடைய பரந்த அனுபவத்தில் 1962-ஆம் ஆண்டில் சில கட்சிகளோடு உறவு கொண்டோம், அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்தில்; பிறகு அந்த உறவுகள் பட்டுப் போயிற்று; மீண்டும் கூடத் துளிர்த்தன; அதற்குப் பிறகு 1967-ஆம் ஆண்டில் சில கட்சிகளோடு உறவு கொண்டோம். பிறகு அந்தக் கட்சிகளுடைய உறவு பட்டுப்போய் 1971-ஆம் ஆண்டிலே வேறு சில கட்சிகளுடைய உறவு வந்தது. இதற்கிடையே 1969-ஆம் ஆண்டில் நம்முடைய உறவு டெல்லியிலிருந்த காங்கிரஸ் கட்சிக்கு, இந்திரா காந்தியின் தலைமையில் இருந்த காங்கிரஸ் கட்சிக்கு அப்போது கிடைக்காமல் போயிருக்குமானால்- ஓட்டுறவைத் தான் சொல்கிறேன்- அந்த ஓட்டுறவு அவர்களுக்கு அப்போது கிடைக்காமல் இருந்திருந்தால் 1969-ஆம் ஆண்டிலேயே இந்தியாவினுடைய தலையெழுத்து வேறு மாதிரியாக எழுதப்பட்டிருக்கும்; இந்தியாவின் வரலாறு வேறு மாதிரியாகத் தீட்டப்பட்டிருக்கும்.

1969-ஆம் ஆண்டிலே நாம் வழங்கிய அந்த உறவு- இந்திரா காந்தி அம்மையாருக்குச் சாதகமாக இந்தியாவின் தலையெழுத்தை மாற்றியமைத்தது. எந்த அளவிற்கு அது இந்தியாவின் தலையெழுத்தை-வரலாற்றை மாற்றி அமைத்தது என்றால், திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் குடியரசுத் தலைவராக ஆவது எட்டாண்டு காலத்திற்குத் தள்ளிப் போடப்பட்டது. இல்லாவிட்டால் எட்டாண்டுகளுக்கு முன்பே திரு. சஞ்சீவிரெட்டி அவர்கள் இந்தியாவின் குடியரசுத் தலைவராக வந்திருக்கக் கூடும். அன்றைக்கு நாம் இந்திரா காந்தியுடன் கொண்ட உறவின் காரணமாக திரு. சஞ்சீவிரெட்டி அவர்கள் குடியரசுத் தலைவராக ஆவதற்கு எட்டாண்டு காலம் இடையில் தாமதம், தயக்கம் ஏற்பட்டது.

நம்மிடம் அன்றைக்கு இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் 24 பேர்கள்; சட்டப்பேரவையில் 138 பேர்கள். இந்த வாக்குகளின் புள்ளிகளைப் பார்க்கும் நேரத்தில் நம்முடைய சட்டமன்ற வாக்குப் புள்ளிகள் ஏறத்தாழ பத்தாயிரம் என்ற அளவிற்கு இருந்தது. திரு. வி. வி. கிரி வெற்றி பெறுவாரா? அல்லது திரு. சஞ்சீவிரெட்டி வெற்றி பெறுவாரா என்று வாக்குகள் எண்ணப்பட்ட போது, தமிழ்நாட்டின் எண்ணிக்கை வருகிற வரையில் திரு. சஞ்சீவி ரெட்டி அவர்கள் தான் வெற்றி பெறுவார் என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது. தமிழ்நாட்டின் வாக்குகள்

எண்ணி முடிக்கப்பட்ட பிறகு தான் பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் புள்ளிகள் வித்தியாசத்தில் இந்திரா காந்தியின் வேட்பாளர் திரு. வி. வி. கிரி அவர்கள் வென்றார்கள் என்கிற செய்தி உலகத்திற்கு கிட்டியது. அந்தச் செய்தி கிடைக்கக் காரண கர்த்தாவாக இருந்தது திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதை வரலாறு மறக்கவில்லை; நன்றி உள்ளவர்கள் மறக்கவில்லை. ஆனால் நன்றிக்கு விலை என்ன என்று கேட்பவர்கள் மறந்துவிட்ட காரணத்தால் நாட்டின் நிலை அலங்கோலமாக ஆனது, அடுத்தடுத்து ஏற்பட்ட பல்வேறு சரித்திரச் சம்பவங்களால் என்பதை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள்.

நம்முடைய கழகத்தினுடைய தலையாய கொள்கையான மத்திய-மாநில உறவு பற்றிய பிரச்சனையை இந்திரா காந்தியை நாம் ஆதரித்த அந்த நேரத்திலும் விட்டுக் கொடுத்தவர்கள் அல்லர்.

இந்திரா காந்தியை ஆதரித்த அதேநேரத்தில் மாநிலங்களுடைய உரிமைகளை நாம் வற்புறுத்தினோம். இன்னும் சொல்லப்போனால் மத்திய மாநில உறவுகளை ஆராய்ந்து மாநில உரிமைகளை வகுப்பதற்கு திரு ராஜமன்னார் தலைமையில் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவையே நாம் அமைத்தோம். முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவரும், தற்காலிக ஆளுநராக பலநாடுகளில் பணியாற்றியவருமான திரு. சந்திரா ரெட்டி அவர்களும், நல்லதோர் மேதை, பேரறிஞர் என்று புகழப்படுகின்ற டாக்டர் லெட்சுமணசாமி முதலியார் அவர்களும், உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த திரு ராஜமன்னார் அவர்களும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழு அமைக்கப்பட்டதற்கான காரணம் அரசியல் வட்டாரத்திலே தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டியது மிக முக்கியமாகும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றார்கள். அதற்கு முன்பு அண்ணா அவர்களுடைய தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டுப் பிரிவினையைக்கோரி வந்த இயக்கமாக இருந்து வந்தது. அது தீது என்கிற வாதம் இந்தியப் பூபாகத்தில் பரவலாக எடுத்துச் சொல்லப்பட்டது.

நாட்டுப் பிரிவினை கோருவதில் உள்ள நியாயங்களை மாநிலங்கள் அவையில் அறிஞர் அண்ணா அவர்கள் பண்டித நேருவிற்கு நேராகவே எடுத்துச் சொன்னார்கள். அந்த வாதங்களை எடுத்துச் சொன்ன போது, அண்ணா அவர்களுடைய சின்ன உருவம் பேருருவமாக இந்தியப் பூபாகத்தையே கலக்கிடக் கூடிய வீர உருவமாக, வடக்கே இருந்தவர்களுக்குத் தென்பட்ட காரணத்தால் இந்தப் பிரிவினை வாதத்தை எப்படியாவது ஒடுக்கிட வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார்கள். அதற்கு நாங்கள் இடம் தருவதாக இல்லை என்று அண்ணா அவர்கள் முழங்கினார்கள் என்றாலும், இடையில் அந்நியநாட்டு ஆக்கிரமிப்பு ஏற்பட்டது.

பாகிஸ்தான் படையெடுப்பு, சீனுவின் தாக்குதல் அதன்காரண மாக இந்தியப் பூபாகத்தில் நாம் இழந்த பகுதிகள், இத்தகைய பரிதா பகரமான நிலைமைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து அறிஞர் அண்ணு அவர்கள் கழகத்தின் பொதுக்குழுவைக் கூட்டி, இந்தியாவின் பாதுகாப் பிற்காக நாம் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்டோம் என்று அறி வித்தார்கள்.

அப்படி அறிவித்த அண்ணு அவர்கள் முதலமைச்சராகப் பொறுப் பேற்ற பிறகு சட்டசபையிலே முழங்கினர்கள். நாங்கள் பிரிவினையைத் தான் விட்டுவிட்டோமே அல்லாமல், அதனைப் பெறுவதற்காக நாங்கள் சொல்லிய காரணங்கள் எதையும் விட்டுவிடவில்லை; அந்தக் காரணங் கள் அப்படியேதான் இருக்கின்றன என்று அண்ணு அவர்கள் அழகாக எடுத்துச் சொன்னர்கள்.

காரணங்களை விட்டுவிடவில்லை என்று குறிப்பிட்டார்கள். நாம் பிரிவினை வாதிகள் அல்ல என்று உறுதிப்படுத்தினர்கள். அதேநேரத்தில் அந்தக் காரணங்களை வைத்து மத்திய அரசோடு வாதாடிக் கொண்டே இருப்போம்; போராடிக் கொண்டே இருப்போம்; அது எங்களுடைய உரிமை என்பதையும் அண்ணு அவர்கள் எடுத்துச் சொன்னர்கள்.

அதற்குப் பிறகு சென்னையில் நடைபெற்ற மாநில சுயாட்சி மாநாடு; அந்த மாநில சுயாட்சி மாநாட்டை நடத்தியவர் சிலம்புச் செல் வர் ம. பொ. சிவஞானம் அவர்கள்; அந்த மாநாட்டில் பேரறிஞர் அண்ணு அவர்கள் கலந்து கொண்டார்கள். கேரள முதலமைச்சராக இருந்த தோழர் திரு ஈ. எம். எஸ். நம்பூத்திரிபாத் அவர்களும், கண்ணியத்திற் குரிய காயிதே மில்லத் அவர்களும், வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நண்பர் கல்யாணசுந்தரம் அவர்களும் அந்த மாநாட்டில் கலந்து கொண்டார்கள். அவர்கள் எல்லாம் கலந்து கொண்டு ஆற்றிய உரை கழக ஏடுகளில் மாத்திரமல்லாமல், இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற ஆங்கில ஏடுகளில் கூட வெளியாகி யிருக்கின்றன.

அண்ணு அவர்கள் மாநில சுயாட்சி தேவை என்பதை வலி யுறுத்தி அந்த மாநாட்டிலே பெரியதோர் உரை நிகழ்த்தினர்கள். மாநில சுயாட்சி கேட்பது ஒரு அரசியல் கட்சியின் கொள்கை அல்ல, அது ஒரு அரசியல் கோட்பாடு, என்று சொல்லி, இன்னும் கூடக் கொஞ்சம் வேக மாக அண்ணு அவர்கள் அங்கே ஒன்றைக் கேட்டார்கள். ஏதோ இந் தியாவின் ஒற்றுமைக்கும் பாதுகாப்பிற்கும் இந்தியாவிலே இருக்கிற சில பேர் உரிமை கொண்டாடுகிறார்கள்; அவர்களுக்கு அந்த உரிமையை யார் கொடுத்தது? எங்களுக்கு அப்படிப்பட்ட எண்ணங்கள் கிடையாது என்று சொல்ல அவர்கள் என்ன தகுதி இருக்கிறது என்று உணர்ச்சிக ரமாகக் கேட்டார்கள்.

பாதுகாப்பு, வெளிநாட்டு உறவு, நோட்டு அச்சடித்தல், போக்கு வரத்து போன்ற சில அதிகாரங்களை மாத்திரம் மத்தியப் பேரரசு வைத்துக் கொண்டு; மற்ற அதிகாரங்களை எல்லாம் மாநில அரசுகளுக்குப் பரவ லாக்க வேண்டும், இல்லாவிட்டால், மத்திய அரசு இந்தியாவின் பாது காப்பு போன்ற விஷயங்களை எல்லாம் கூட கோட்டை விட்டாலும் விட்டு விடும், என்று அறிஞர் அண்ணு அவர்கள் அன்றைக்கே தெரிவித்தார்கள்.

இதற்கிடையே 1965 ஆம் ஆண்டு இந்தியாவினுடைய மிகப் பெரிய வாரப் பத்திரிக்கைகளில் ஒன்று என்று சொல்லப்படுகிற "இல்லஸ் ரேட்டட் வீக்லி" என்ற பத்திரிக்கையின் ஆசிரியர் பேரறிஞர் அண்ணு அவர்களைப் பேட்டி காணச்சொல்லி, திரு. ராமன் என்கிற ஒரு திறமை வாய்ந்த நண்பரை அனுப்பியிருந்தார்கள். அவர் அண்ணு அவர்களை நுங்கம்பாக்கத்தில் அண்ணு அவர்களுடைய இல்லத்தில் பேட்டி கண்டார். அந்தப் பேட்டியில் அண்ணு அவர்களிடம் கேட்ட கேள்விகளில் முக்கிய மான ஒரு கேள்வி, பிரிவினை கொள்கையை விட்டுவிட்டீர்களே; இப்போது உங்களுடைய கொள்கை என்ன, கோட்பாடு என்ன என்று கேட்டபோது அண்ணு அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்: "மத்தியிலே உண் மையான கூட்டாட்சி அமைப்பதும், மாநிலங்களுக்கு முழுமையான சுயாட்சி கேட்பதும் "Full Autonamy" என்கிற அதே ஆங்கிலச் சொல்லைப் பயன்படுத்தி இதுதான் எங்களுடைய கொள்கை, எங்கள் கட்சியின் கோட் பாடு என்று 1965 ஆம் ஆண்டிலேயே அண்ணு அவர்கள் அந்தப் பேட்டி யின் போது குறிப்பிட்டார்கள்.

மாநில சுயாட்சி மாநாட்டில் பேசிய அண்ணு அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார். "மாநாடு நடத்துகிற நண்பர் ம.பொ.சிவஞானம் அவர்கள் மத்திய மாநில உறவுகளை ஆராய அவரைச் சார்ந்த நண்பர் களைக் கொண்டு ஒரு குழுவினை அமைத்து, மத்திய மாநில உறவு சீர்பட வேண்டும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று கருது கிறவர்களை எல்லாம் அதிலே இணைத்து; மொத்தக் கருத்தை வெளியிட்டால் சிலாக்கியமாக இருக்கும்" என்ற கருத்தை அண்ணு அவர்கள் தெரிவித் தார்கள். அண்ணு அவர்கள் முதலமைச்சராக இருந்த போது இதனைத் தெரிவித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு ஆறேழு மாதங்களில் இயற்கை அண்ணு அவர்களை நம்மிடமிருந்து கொத்திச் சென்று விட்டது. அண்ணு அவர்கள் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. யிடம் சொன்ன அந்தக் கருத்து, வடிவம் பெறவில்லை. செயல்படவில்லை.

எனவே தான் அண்ணுவிற்குப் பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நான் அதைப்பற்றி சிந்தித்து; ராஜமன்னர் குழுவை அமைத்து, மத்திய மாநில உறவுகள் பற்றி ஆராய்ந்து ஒரு பரிந்துரை தாருங்கள் என்று கேட்டு, அவர்களும் ஓராண்டு காலத்திற்கு மேலாக அதற்காக தங்களுடைய சிந்தனையைச் செலவிட்டு, பல அறிஞர்களிடம் உறவாடி பல நூல்களிலிருந்து மேற்கோள்களை எல்லாம் எடுத்துக் காட்டி

மத்திய மாநில உறவு என்பது பற்றிய ஒரு பெரிய நூலைத் தயாரித்துத் தந்தார்கள். அப்படித் தயாரிக்கப்பட்ட அந்தப் பரிந்துரையை அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு நாம் அனுப்பிவைத்து, அந்தப் புத்தகத்தைப் பெற்றுக்கொண்ட இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் எனக்கு எழுதிய அந்தக் கடிதத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள்.

மத்திய மாநில உறவுகளைப் பற்றி ஆராய ஏற்கனவே மத்திய சர்க்காரின் சார்பாக ஒரு குழு போடப்பட்டது. நீங்கள் அனுப்பிய ராஜமன்னார் குழுவின் சிபாரிசுகளையும் நாங்கள் படித்துப் பார்க்கின்றோம். விரைவில் முதலமைச்சர்களுடைய மாநாடு ஒன்றினைக் கூட்டி, அனைவருடைய கருத்துகளையும் அறியலாம் என்று பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொன்னார்கள். அண்ணு அவர்களுடைய கொள்கைக்கு ஏற்ப அந்தக் கமிட்டி போடப் பட்டது. அதற்குப் பிறகு அந்தக் கமிட்டியின் சிபாரிசுகள் இந்திரா காந்திக்கு அனுப்பப் பட்டது. அதுவும் சரித்திரக் குறிப்பு. பிறகு, இந்திரா காந்தி அம்மையார், பிரதமர் என்ற முறையிலே எழுதிய கடிதத்தில், இதைப்பற்றி உட்கார்ந்து பேசவேண்டும் என்ற உண்மையை ஒப்புக் கொண்டார்கள்.

ஆனால் அந்தக் கடிதத்திற்குப் பிறகு; நான் பலமுறை இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்து கேட்ட நேரத்திலும், 'பார்க்கலாம், பார்க்கலாம்' என்று நாள் கடத்தினார்களே அல்லாமல், மத்திய மாநில உறவுகளைப் பற்றியோ, மத்தியில் குவிந்து கிடக்கின்ற அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பரவலாக்க வேண்டும் என்பது பற்றியோ அவர்கள் அதிக அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை,

அதற்குப் பின்னர், தமிழகச் சட்டமன்றத்தில், ராஜமன்னார் குழு பரிந்துரையை கழகத்தின் சார்பாக மாறன், செழியன் இருவரையும் அமைப்பாளர்களாகக் கொண்ட ஒரு குழு வாயிலாக ஆராய்ந்து அவர்கள் அளித்த கருத்துக்களையும் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை ஆராய்ந்து. அதற்கு ஒரு முழு வடிவம் தந்து, அந்த வடிவத்தைத் தீர்மானமாக ஆக்கி, தமிழகச் சட்டப்பேரவையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்கிற தீர்மானத்தை இந்தியாவிலேயே ஒரு மாநிலம், ஒரு மாநில அரசு முதன்முதலாக நிறைவேற்றியது என்றால் அது தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக அரசு தான் என்பதை நான் ஞாபகப்படுத்திக் கொள்வேன். இந்தத் தீர்மானத்தை நாம் டில்லிக்கு அனுப்பி வைத்தோம். எந்தவிதமான பதிலும் இல்லை என்றாலும் கூட அப்போது இந்திரா காந்தி அம்மையாரைச் சந்தித்த நிருபர்கள் கேட்டார்கள். எங்கேயென்றால், 1973 அல்லது 1974 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், கோழிக்கோடு என்கிற இடத்தில் இந்திரா காந்தி அம்மையாரைச்சந்தித்து நிருபர்கள் கேட்டபோது, மாநில சுயாட்சி என்பது பிரிவினை என்று சொல்கிறார்களே, நாட்டைப் பிரிப்பது என்று சொல்கிறார்களே,

உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோது, பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தெளிவாக, "பிரிவினை என்பது வேறு, மாநில சுயாட்சி என்பது வேறு" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால் அதற்குப் பிறகு நாம் கேட்ட மாநில சுயாட்சிக்கு பிரிவினை வண்ணத்தைத் தீட்டி, நாம் பிரிவினை வாதிகள் என்று மக்களிடத்திலே நம்மைப்பற்றி தவருன கருத்துக்களை எடுத்துச் சொல்லி நம்முடைய மாநில சுயாட்சி முழக்கத்திற்கு ஒரு மாசு கற்பிக்கலாம் என்கிறபரவலான பிரச்சாரம் நாட்டிலே நடைபெற்றது என்றாலும் கூட இன்றைக்கு அனைத் தையும் மீறி மாநில சுயாட்சி தத்துவம் ஒரு புதிய மகத்துவத்தைப் பெற் றிருக்கிறது என்று சொன்னால் அதை யாரும் மறுக்க முடியாது.

நான் வெளிநாடுகளுக்கு ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பு சென்றி ருந்த போது நிருபர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு இந்தியாவிலே எதிர் காலத்தில் எந்தக் கட்சிக்கு செல்வாக்கு இருக்கும் என்று கேட்டார்கள். அப்போது நான் அவர்களிடம் "இனிமேல் இந்தியாவில் மாநில கட்சிகள் தான் அதிக செல்வாக்குப் பெறும், அதிக வலுவினைப் பெறும்' என்று சொன்னேன். நான் சொன்ன நேரத்தில், ஓரிசாவில் சுதந்திரா கட்சியின் ஆட்சி, மேற்கு வங்கத்தில் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டு ஆட்சி, பஞ்சாபில் அகாலிதள கட்சியின் ஆட்சி, கேரளாவில் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி, தமிழகத்தில் தி. மு. கழகத்தின் ஆட்சி இப்படி இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களில் டெல்லியை ஆண்டு கொண்டிருக்கிற காங்கிரஸ் கட்சியின் குரலாக இல்லாமல், வெவ்வேறு மாநில கட்சியின் ஆட்சிகள் இருந்த காரணத்தினுல், நான் எதிர்பார்த்துச் சொன்னேன், எதிர்காலம் அந்தந்த மாநில கட்சிகளின் காலமாகத் தான் இருக்கும் என்று.

மத்தியிலே இருக்கிற அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு மாநிலங் களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை விரைவில் வெற்றி பெறும் என்று சொன்னேன். ஆனால் தடதடவென்று மாநிலக் கட்சிகளு டைய ஆட்சிகள் கீழே விழுந்தன.

மேற்கு வங்கத்திலே இருந்த அஜாய் முகர்ஜி அவர்களின் ஆட்சி விழுந்தது, பஞ்சாபில் இருந்த அகாலிதள ஆட்சி விழுந்தது, ஓரிசாவிலே இருந்த சுதந்திரா கட்சியின் ஆட்சி விழுந்தது, இப்படி ஆங்காங்கு, மாநில கட்சிகளுடைய ஆட்சி விழுந்தது மாத்திரமல்ல, 1975ஆம் ஆண் டிலே ஏற்பட்ட பல சூழ்நிலைகளைக் காரணமாகக் காட்டி, இந்திராகாந்தி அம்மையார் அவசரக்கால சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு மாநில கட்சிகள் எல்லாம் கலைக்கப்படும் என்ற வதந்திகள் பரப்பப்பட்டு, தமிழ் நாட்டிலே மாநில கட்சிகளாக இருந்த கட்சிகள் எல்லாம் கூட, அகில இந்திய என்கிற பெயரை தங்களுக்குப் பின்னுல் ஒட்டிக் கொண்டால் தான் தப்பிக்கலாம் போல் இருக்கிறது என்கிற உணர்வோடு, அகில இந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம், என்று தங்களுடைய

பெயரை நீளமாக ஆக்கிக் கொண்டார்கள். எதற்காக இதனைக் குறிப் பிடுகிறேனென்றுல், நான் வெளிநாடுகளில் சொன்ன அந்த சொல் எங்கே பொய்த்துவிடுமோ என்ற சந்தேகம் கூட எனக்கு ஏற்பட்டது.

நான் ஒன்றும் தீர்க்கதரிசி அல்ல. அரசியலிலே பெரிய மேதை யுமல்ல; இன்னும் ஏழாண்டு காலத்திற்குப் பிறகு என்ன நடக்கக் கூடும் என்று சொல்லக் கூடிய அதியற்புதமான அரசியல் வாதியுமல்ல.

நான் அடக்கத்தின் காரணமாகச் சொல்கிறேன், அப்போது நாட்டிலே உள்ள நிலைமையைவைத்துச் சொன்னேன். அந்த அடிப்படை யில் 'இனிமேல் இந்தியாவில் மாநிலக் கட்சிகளின் ஆதிக்கம் தான் அதிக மாக இருக்கும்' என்று சொன்னேன்.

அவசரகாலச் சட்டத்திற்குப் பிறகு மாநிலக் கட்சிகள் எல்லாம் மளமளவென்று தலையிறக்கம் கொண்டன; தமிழகத்தில் முன்னேற்றக் கழகத்தினைத் தவிர; மற்ற மாநிலக் கட்சிகள் எல்லாம் தலைவணங்கி வளைந்து கொடுத்தன. இந்தியாவில் இனி ஒரே கட்சிதான் இருக்கும்; ஒரே கட்சி ஆட்சி தான் இருக்கும்; அது காங்கிரஸ் கட்சியாகத் தான் இருக்கும்; ஒரே கொடி தான் பறக்கும், அது காங்கிரஸ் கட்சியின் கொடி யாகத் தான் இருக்கும்; ஒரே நபர்தான் ஆளுவார், அவருக்குப் பெயர் இந்திரா; இந்திரா என்றுல் இந்தியா, இந்தியா என்றுல் இந்திரா என் கிற அளவிற்கு நிலைமைகள் கடந்த காலத்தில் ஏற்பட்ட போது, நான் அயல்நாட்டு நிருபர்களிடம் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்து, உடைந்து விட்டது; அந்தக் கருத்து செல்லாததாக ஆகிவிட்டது. அது இனிமேல் எடுபடாது என்ற எண்ணத்திற்கு நான் வந்தேன்.

ஆனுல் ஜனநாயகம் தப்பிப் பிழைத்து, சர்வாதிகாரம், தான் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்த பிறகு இன்றைக்கு மீண்டும் இந்தியாவிலே மாநில சுட்சிகளுக்கு செல்வாக்கு உயர்ந் திருப்பதை நாம் பார்க்கிறேம்.

டெல்லியிலிருந்து தமிழகம் வந்து பேசியவர்கள் கூட மாநிலக் கட்சிகளை நம்பக் கூடாது, பிராந்தியக் கட்சிகளால் எதையும் சாதிக்க முடியாது; தேசிய நீரோட்டத்தில் அனைவரும் சேரவேண்டும்'' என்றெல் லாம் சொன்னுர்கள்.

அவ்வப்போது சில மக்களைக் கவர சில புதுச் சொற்களைக் கண்டு பிடிக்கிறுர்கள். அப்படிக் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு சொல் தான் 'தேசிய நீரோட்டம்' தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் என் கிறுர்கள்.

நீரோட்டத்தில் கலந்தால் என்னவாகும் என்று நமக்குத் தெரியும். எனவே தான் நாங்கள் நீரோட்டத்தில் கலக்கத் தயாராய் இல்லை, நாங்கள் பெரியார் காலத்திலிருந்து, தியாகராயர் காலத்திலிருந்து, அறிஞர்

அண்ணு காலத்திலிருந்து, எந்த நீரோட்டத்திலும் நீரோடு போகிறவர் கள் அல்ல; எதிர்நீச்சல் போட்டவர்களே தவிர,, நீரோடு போகிறவர்கள் அல்ல; ஆகவே அந்த நீரோட்டத்தோடு கலக்கத் தயாராக நாங்கள் இல்லை. ஆனால் அந்த நீரோட்டத்திற்கு ஒரு ஆபத்து வருமேயானால், இந்திய ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் வருமேயானால், இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஏதாவது ஒரு விபத்து தோன்றுமானால், அப்படிப்பட்ட நேரத்திலே தேசிய நீரோட்டம்மட்டுமல்ல; தேசிய ரத்தவோட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து நிற்கும்.

அந்த உறுதியோடு தான், எங்கள் மாநில மக்களுடைய உரிமை களைக் காக்க, மாநில மொழியைக் காக்க, பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட ஒரு அமைப்பு இந்தியத் துணைக்கண்டம். அந்த இந்திய துணைக்கண்டத்தில் இருக்கிற பல்வேறு தேசிய அமைப்புகளின், தேசிய இனங்களின், புகழை, உரிமையைக் காக்க, ஆங்காங்கு இருக்கின்ற மாநில கட்சிகள் உரிமை பெற்றவை; அதைப்போலவே, இங்கேயிருக் கிற தமிழர்களுக்கு என்று ஒரு தேசிய பாரம்பரிய வரலாறு உண்டு.

இது ஒரு தேசிய இனம்; எங்களுக்கு என்று ஒரு மொழி உண்டு; பண்பாடு உண்டு; மரபுகள் உண்டு; இலக்கியங்கள் உண்டு; இவைகளை நாங்கள் கொண்டுபோய் தேசிய நீரோட்டத்திலே கலந்துவிடுவோமானால் பிறகு நான் குறைந்தபட்சம் சொல்கிறேன், சுயமரியாதைக்காரர்களுக்குப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும், புராணீகர்களுக்கு, பக்தர்களுக்குப் பிடிக்கும் என்று தான் சொல்கிறேன், தேசிய நீரோட்டத்திலே கலந்து விடுவோமேயானால், கம்பராமாயணம் அழியும், துளசிதாசர் ராமாயணம் தான் நாட்டிற்கு அறிமுகமாகும்! எனவே தான் தேசிய நீரோட்டத்தில் கலப்பதை சுயமரியாதை இயக்கத்தின் வழித்தோன்றல்களாக இருக்கும் திராவிட இயக்கக்காரர்கள் மாத்திரமல்ல, ஆஸ்திக, வழித்தோன்றல்களாக இருக்கின்ற இலக்கிய கர்த்தாக்கள், இலக்கியவாதிகள், கம்பராமாயணப் பிரியர்கள் இவர்களுக்கெல்லாம் கூட அதனால் ஆபத்து ஏற்படும் என் பதை மறந்துவிடக் கூடாது.

நாங்கள் தேசிய நீரோட்டத்திலே கலக்காவிட்டாலும், தேசத்தின் பாதுகாப்பில் ஒன்றியிருப்போம் – முந்திக் கொள்வோம், ஆனால் மாநில உரிமைகளைக் காப்பாற்றுகின்ற கட்சியாகச் செயல்படுவோம் என்று உரைப்போம்.

டெல்லியிலிருந்து வந்து பேசியவர்கள் மாநிலக் கட்சிகள் அரசு அமைக்கக் கூடாது என்று சொன்னார்கள். இன்று என்னதான் அனைத் திந்திய கட்சி என்று பெயரை மாற்றிக் கொண்டாலும் கூட, தமிழகத்திலே இருக்கிற ஆளுங்கட்சியை ஒரு மாநில கட்சி என்றுதான், டெல்லியில் இருப்பவர்கள் இன்றைக்கும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். அதை அகில இந்திய நீதியில் யாரும் அங்கீகரிக்க முன்வரவில்லை. இவர்கள்

வேண்டுமானால், நாங்கள் அகில இந்தியா, அகில இந்தியா என்று சொல்லிக் கொண்டிருக்கலாமே தவிர, மாநிலக் கட்சி என்ற நிலையிலே தான் அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

நான் கூடக் கேட்டேன் அப்போது; நான் அப்படிக் கேட்டது இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற ஆளுங்கட்சிக்கு சார்புடைய வாத மாகக் கூட இருந்திருக்கலாம்! நான் இங்கே இருக்கும் ஆளுங்கட்சிக் காகச் சொல்லவில்லை; நம்முடைய மாநில உரிமைகள் இன்றில்லாவிட் டாலும் எதிர்காலத்தில் காக்கப்பட வேண்டும் என்கின்ற நிரந்தரமான ஒரு காரியத்திற்காக நான் கழகத்தின் சார்பாக எடுத்து வைத்த வாதம் அது.

இங்கேயிருக்கிற மாநிலக் கட்சிகளோடு தொடர்பு கொள்ளக் கூடாது, இங்கேயிருக்கிற மாநில கட்சிகள் ஆளுங்கட்சியாக வரக்கூடாது என்று டெல்லியிலே இருக்கிறவர்கள் நினைத்தால், அவர்களோடு ஒட் டுறவு கொண்டிருக்கிற ஓட்டுறவு கொண்டிருக்கிற அகாளிதளம் என்கிற மாநில கட்சி, பஞ்சாபில் இன்றைக்கு ஆளுங்கட்சியாக வந்திருக்கிறது. அது எந்த வகையில் நியாயம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தின் சார்பில் கேட்க விரும்புகிறேன்.

எனவே மாநிலங்களில் ஒரு கட்சி உருவானது கூட, அது ஏதோ மத்தியில் இருக்கிற கட்சிக்கு—ஆட்சிக்கு எதிராவது என்று யாரும் கருதக்கூடாது. அப்படிக் கருதுவது தவறு; ஏனென்றால் மாநிலங்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் பல்வேறு வகை களில் போராட வேண்டியிருக்கிறது.

இன்றைக்கு டெல்லியிலே அமைந்திருக்கிற ஜனதா அரசு தேர்தல் நேரத்திலே என்னென்ன வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்தது, மத்தியிலே இருக்கிற அதிகாரக் குவியல்கள் மாநிலங் களுக்குப் பரவலாக ஆக்கப்பட வேண்டும் என்ற வாக்குறுதிகளை அளித்த அரசுதான். இன்றைக்கு டெல்லியிலே வீற்றிருக்கிற ஜனதா அரசாகும். ஆனால் அந்த அரசு அமைந்து இரண்டொரு மாதங்கள் கடந்து போன போதிலும் கூட இன்னும் அப்படிப் பட்ட காரியங்களுக்கான முனைப்பான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட வில்லை என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

இன்னும் சொல்லப்போனால், 'ஒட்டகக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத்தாழ்ப்பாள்' என்பதைப்போல், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தர வேண்டும் என்று வாதிட்டுக் கொண்டிருந்த கட்சிக்காரர்கள் இன்று ஆளுங் கட்சிக்காரர்களாக ஆன பிறகு, ஏற்கனவே இருந்த சர்வாதிகார ஆட்சியில் அரசியல் சட்டம் திருத்தப்பட்டபோது, மாநிலங்களுக்கு என்று ஒதுக்கப் பட்டிருந்த கல்வித்துறையைக் கூட, இன்றைக்குப் பொதுத்துறையாக ஆக்கிக்

கொண்டு, அதையும் மத்திய சர்க்கார் தன்வயப்படுத்துவது என்று ஒரு சூழ்நிலை எழுந்திருக்கிறது.

அதைப்போலவே, சர்வாதிகார ஆட்சியின் போது திருத்தப் பட்ட அரசியல் சட்டத்தின் அடிப்படையில், மத்திய சர்க்கார் மாநிலங்களைக் கேளாமலே, மத்திய போலீசை அனுப்பலாம் என்கிற அந்த அத்து மீறிய செயலும், அப்போது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது அந்தச் செயல் நிறுத்தப்படும் என்ற நிலை இன் றைக்குக் கூட ஜனதா அரசால் அறிவிக்கப்படவில்லை!

'இந்து' பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்தால், இந்தி யாவின் நிதி அமைச்சர் திரு. எச். எம். படேல் அவர்கள் மாநிலங் களுக்கு நிதி ஆதாரங்களை மத்திய அரசிடமிருந்து தாராளமாகத் தர. மாநிலங்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் தர, மாநிலங்கள் கேட்கிற உரிமைகளின் அடிப்படையில் தர, அரசியல் சட்டத்தைத் திருத்த நாங்கள் தயாராக இல்லை என்பதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்தியைக் கேள்விப்படுகின்ற நேரத்தில் நான் திடுக்கிடுகிறேன்.

ஏனென்றால் நானும், திரு, அசோக்மேத்தாவும், திரு.எச்.எம். படேலும், திரு. வாஜ்பாய், திரு. பட்நாயக், திரு. பிலுமோடி, மற்றும் பல டெல்லி வட்டாரத் தலைவர்களும், நண்பர் செழியன் இல்லத்தில் அமர்ந்து—நம்முடைய நண்பர் ராசாராம் உள்பட, நாங்கள் எல்லாம் டெல்லியிலே உட்கார்ந்து பேசிய நேரத் தில் நாங்கள் அங்கே எழுதிய வரைவில் மாநிலங்களுக்கு அதிகாரங் கள் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும், பரவலாக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்தும் எழுதப்பட்டு, அது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்தாக இருந்தது. அந்தக் கட்சியிலே உள்ள பெரும்பாலோர் சேர்ந்துதான் இன்றைக்கு ஜனதா கட்சியை உரு வாக்கியிருக்கிறார்கள்.

அந்தக் கட்சியின் ஆட்சிதான் இன்றைக்கு இந்தியாவிலே— மத்தியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆட்சி, திடுக் கிடத்தக்க வண்ணம் நிதி ஆதாரங்களைப் பெருக்குகின்ற உரிமை களைக் கூட மாநிலங்கள் கேட்கின்ற நேரத்தில் அதற்கேற்ற வகை யில் அரசியல் சட்டத்தைத் திருத்த நாங்கள் தயாராக இல்லை என்று மேன்மைதங்கிய திரு.எச் எம். படேல் அவர்கள் அறிவித்தி ருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்று.

உரிமைகளுக்காகப் போராடுகின்ற நேரத்தில் ஒன்றை நாம் மறந்துவிடக்கூடாது. 'உறவுக்குக் கைகொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற வாசகத்தை அண்ணு அவர்களின் படத்தினை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் திறக்க வந்தி

ருந்தார்களே, அப்போது அவர்களை வைத்துக் கொண்டு, அதே மேடையில் நான் பேசினேன். அப்போதுதான் அந்த வாசகமே உருவானது.

இந்திரா காந்தி அம்மையார் நான் முதலமைச்சரானதும் சிலரிடத்திலே கேட்டார்களாம். ஏற்கனவே இருந்த முதலமைச்சர் அண்ணாதுரை மத்திய சர்க்காரிடத்திலே மிக மென்மையாகப் பழகக் கூடியவர், ஆனால் புதிதாக வந்திருக்கிற கருணாநிதி மத்திய சர்க்காரிடம் மோதிக் கொள்ளத் தயாராக இருக்கிறாளாமே என்று பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் கேட்டார்களாம். நான் அவர்களுடைய சந்தேகத்தினைப் போக்குகின்ற வகையில் ஒன்றைச் சொல்கிறேன், எங்கள் அண்ணன் கற்றுத் தந்த பாடம்தான் அது, மாநிலம் மத்திய அரசோடு உறவுக்குக் கை கொடுக்கும். அதே நேரத்தில், அம்மையார் அவர்களே, உரிமைக்குக் குரல் கொடுக்கும், என்று நான் அவர்களுக்கு நேராகவே சொன்னேன்.

அப்படி சொன்னது வெறும் வாய்ச்சொற்கள் அல்ல என்பதைக் காட்டுகின்ற வகையில் உரிமைக்குக் குரல் கொடுக்க வேண்டிய நேரத்தில் எல்லாம் தமிழக அரசின் சார்பில் நாம் குரல் கொடுத்திருக்கிறோம். அப்படி குரல் கொடுத்த நேரத்திலே அந்தக் குரலை காதிலே வாங்கிக் கொள்ளாமல், அல்லது வாங்கிக் கொண்டு அது கடும் வேதனையை உருவாக்கிய காரணத்தால் "குரல் கொடுத்தாயா, உன் குரல்வளையை நெறிக்கிறேன் பார்; என்ற வகையில் தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதே அல்லாமல், நம்முடைய குரலிலே உள்ள உண்மையை, நியாயத்தை, நேர்மையை, உரிமை உணர்வை அன்றைக்கு இருந்த பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் உணர்ந்து கொள்ள தவறிவிட்டார்கள் என்று தான் நான் கூற முடியும்.

இன்னும் கூட அப்போது நாம் கேட்டோம். இந்தியாவிலே கூட ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக கொடிகள் இருக்கின்றன. வெளிநாடுகளுக்குச் சென்றால், ருஷ்ய நாடு ஒரே நாடுதான் என்றாலும் கூட, அந்த ருஷ்ய நாட்டிலே உள்ள பல்வேறு மாநிலங்களுக்கு பல்வேறு கொடிகள் இருக்கின்றன; அதைப்போல தேசியக் கொடி இணைந்த நிலையில் தமிழ்நாடு மாநில அரசுக்குத் தேவையான தனிக் கொடி இருக்கக் கூடாதா என்ற அளவிற்குக் கூட நம்முடைய குரலை எழுப்பினோம். அதற்குப் பதிலளித்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அப்போது சொன்னார்கள்.

வெளிநாடுகளில் இருக்கிற மாநிலங்களில் இப்படி தனித்தனி கொடிகள் மாநிலங்களுக்கு இருக்கின்றன; ஆனால் இந்தியாவைப்

பொறுத்தவரையில் அது ஆராயப்பட வேண்டிய விஷயம் என்று இந்திரா காந்தி அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். நான் இவைகளை எல்லாம் எடுத்துக் காட்டுவதற்குக் காரணம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்று சொன்னால் மாத்திரம் போதாது, உள்ளத்து அளவில் செயல்பட வேண்டும்.

இன்றைக்கு தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றிருக்கும் ஆட்சியாளர்கள் கூட "நாங்கள் மத்திய சர்க்காரோடு வீணாக மோதிக் கொள்ள மாட்டோம், ஆனால் மோதிக் கொள்கிற கட்டம் வந்தால், பின் வாங்க மாட்டோம்" என்றெல்லாம் பேசுகிறார்கள். நான் அவர்களுடைய இந்த வாசகத்தில் முதல் பகுதியை ஏற்றுக் கொள்கிறேன். இரண்டாவது பகுதியைச் சந்தேகிக்கிறேன்.

ஏனென்றால் மத்திய சர்க்காரோடு மோதிக் கொள்ள மாட்டோம் என்பது அவர்களுடைய வேதப் புத்தகமாக இருந்து வருகிறது.

எந்த மத்திய சர்க்கார் வந்தாலும் அவர்கள் மோதிக் கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்கள்; அவர்கள் அப்படி மோதிக்கொள்ளக் கூடிய வீரம் பெற்றவர்களாக, துணிவு பெற்றவர்களாக இருப்பார்களானால், 1,66,000 பேர் மிசா கைதிகளாக சிறைச்சாலையில் விசாரணை இல்லாமல், நீதிமன்றத்திற்குச் செல்ல முடியாமல், நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளுக்குத் தாழ்ப்பாள் போடப்பட்டு, நீதிமன்றத்தின் பெரும் கதவுகள் எல்லாம் பூட்டப்பட்டுக் கிடந்த நேரத்தில் மத்திய சர்க்காரோடு மோதியிருப்பார்கள், ஆனால் அப்படி மோதவில்லை.

அப்பொழுது அவர்கள் உரிமைகளைப் பற்றி சிந்திக்கவில்லை. அதைப்போலவேதான் மத்தியிலே இருந்த ஏதேச்சதிகார அரசு ஜனநாயகத்திற்கு முற்றிலும் புறம்பாக தமிழகத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்த போது அதற்கு 'சபாஷ்' போட்டவர்கள், கையொலி செய்தவர்கள், அதை ஆதரித்து சிறப்பு பாயிரம் படித்தவர்கள் டெல்லி பாராளுமன்றத்தில் நீங்கள் செய்தது தான் சரி என்று எடுத்துரைத்தவர்கள், இன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள ஆட்சியாளர்களாக இருப்பவர்கள்.

ஆனால் ஒரு விஷயத்தை நான் உங்களுக்குச் சொல்வேன். என்றைக்காவது ஒருநாள், இங்கேயிருக்கின்ற ஆட்சியின்மீது, மேலே இருக்கிற டெல்லியின் ஆட்சி கைவைத்து, இந்த ஆட்சியை

எங்களைக் கலைத்ததைப் போல, காரணமில்லாமல், ஜனநாயகத்திற்கு விரோதமாகக் கலைப்பார்களானால், அந்த நேரத்தில் அதை எதிர்த்து முதல் குரல் கொடுக்கின்ற கட்சியாகத் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் எங்களுக்கு ஒரு ஆபத்து வந்த நேரத்தில்—எங்களுக்கு என்று கூடச் சொல்லமாட்டேன், ஜனநாயகத்திற்கு ஒரு பேராபத்து வந்த நேரத்தில், காலை வரை கவர்னர் பேசுகிறார், காந்தியடிகளுடைய பாதையிலே நடைபெறுகின்ற அரசு தி.மு.கழக அரசு என்று, அதே கவர்னருடைய வாய் மாலையிலே திருவாய் மலர்ந்தருளுகிறது, இது ஒரு ஊழல் அரசு, நிர்வாகத் திறனற்ற அரசு, என்று அதே கவர்னர் பேசுகிறார். அந்த இடைக்காலத்தில் என்ன ஏற்பட்டது என்ற கேள்வியைக் கூடக் கேட்காமல், 'ஆகா, கருணாநிதி கீழே இறக்கப்பட்டானு? கழக அரசு வீழ்ந்ததா,' என்று கெக்கலி கொட்டிவர்கள், கற்கண்டு வழங்கியவர்கள், இனிப்புகளை விநியோகித்தவர்கள், இங்குள்ள சில கட்சிக்காரர்களாக இருந்தாலும், நான் அவர்களுக்கும் சொல்லிக் கொள்வேன். நீங்கள் இந்திரா காந்தியின் அரசிடம் கொண்டிருந்த உறவின் காரணமாக—எங்களிடம் கொண்டிருந்த வெறுப்பின் காரணமாக — நாங்கள் கவிழ்க்கப்பட்ட நேரத்திலே மகிழ்ச்சி அடைந்தீர்கள்;

ஆனால் எங்களுக்கும், மொரார்ஜி தேசாய் அவர்களுக்கும் உறவு இருந்தாலும்கூட, அவர் ஜனநாயகத்திற்கு விரோதமாய் இங்கேயிருக்கிற அரசைக் கலைக்கத் துணிவாரேயானால், நாங்கள் அந்த உறவையும் பார்க்காமல், மாநில உரிமைக்காகப் போராடுகின்ற கட்சியாகத்தான் நாங்கள் அன்றைக்கும் இருப்போம்.

மாநில சுயாட்சி தீர்மானம் சட்டமன்றத்தில் வந்தபோது இன்றைக்கிருக்கிற ஆளுங் கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் என்ன சொன்னார்கள்? ''மாநில சுயாட்சிக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறோம், ஆனால் முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே இருக்கும்போது மாநில சுயாட்சி தரக்கூடாது,'' என்று சொன்னார்கள். அதற்குப் பெயர் அரசியல் வாதமா? முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கும்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தரக்கூடாது, தந்தால் அதை துர்விநியோகம் படுத்தி விடுவார்கள். ஆகவே இந்தத் தீர்மானத்தினை எதிர்க்கிறோம் என்று சொன்னார்கள்.

நான் அண்மையில் சட்டமன்றத்தில் பேசியபோதுகூட அதனைச் சுட்டிக் காட்டினேன். முன்னேற்றக் கழக அரசு இருக்

கிற நேரத்தில் மாநில சுயாட்சி தரக்கூடாது என்று சொன்னீர்கள். ஆனால் மாநில சுயாட்சியை நீங்களே கேட்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இன்றைக்கு முன்னேற்றக் கழகம் எதிர் தரப்பிலே அமர்ந்திருக்கிறது. நீங்கள் ஆளுங் கட்சியாக இருக்கிறீர்கள். நீங்கள் இப்போது மாநில சுயாட்சி கேட்கும் போது, நாங்கள் உங்களைப்போல குறுகிய மனப்பான்மையோடு அதனை எதிர்க்க மாட்டோம். உங்களோடு சேர்ந்து அதற்காக வாதாடத் தயாராக இருக்கிறோம் என்று சொன்னேன்.

நம்முடைய கழக ஆட்சி கவிழ்க்கப்பட்ட நேரத்தில் இவர்கள் எவ்வளவு மகிழ்ச்சியோடு பேசினார்கள். அப்படி பேசிய வேகத்திலே அண்ணா அவர்கள் தந்த கொள்கைகளை எல்லாம் மறந்து விட்டுக் கூட பேசினார்கள்.

இன்றைக்கு நிதியமைச்சராக இருக்கிற மனோகரன் நாடாளுமன்றத்தில் அவருடைய கட்சியின் தலைவராக இருந்துகொண்டு என்ன பேசினார்? **''இந்திப் பிரச்சினையைத் தமிழ் நாட்டில் கருணாநிதி தான் கிளப்புகிறான்: நாங்கள் இந்திக்கு ஆதரவாளர்கள்.''**

We are for Hindi என்று சொன்னார். நான் சட்டமன்றத்திலேயே எடுத்துக் காட்டினேன். We are for Hindi என்று சொல்லவில்லையா? இந்திப் பிரச்சினையை கருணாநிதான் கிளப்புகிறான் என்று சொல்லவில்லையா? அப்படிச் சொல்லிவிட்டு இன்றைக்கு நாங்கள் இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் என்று கவர்னர் உரையில் சொல்லியிருக்கிறீர்கள். பரவாயில்லை. எங்களுக்கு ஒரு வகையில் உங்கள் மீதிருந்த அச்சம் நீங்கிவிட்டது. ஏனென்றால் கவர்னர் உரையை படித்துப் பார்த்த பிறகு அந்த அச்சம் நீங்கிவிட்டது. நீங்களும் அண்ணா அவர்களின் இரு மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று திருப்தியடைந்தேன், என்று சொன்னேன். இது நிதியமைச்சருக்கு சுருக்கென்று தைத்தது போலும். எனவே எழுந்தார். என்ன சொன்னார் தெரியுமா?

பாராளுமன்ற நடவடிக்கை புத்தகத்தை கருணாநிதி முழுவதும் படித்துப் பார்க்காமல் ஏதோ இரண்டு வரிகளை மாத்திரம் எடுத்து வைத்துக்கொண்டு ''We are for Hindi'' என்று நான் சொன்னதாக ஒரு தவறான கருத்தைச் சொல்கிறார் என்று குறிப்பிட்டார். அப்படிக் குறிப்பிட்டபோது நான் சொன்னேன், 'நீங்கள் இப்படிக் கேட்பீர்கள் என்று தெரிந்துதான் பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பைக் கொண்டு வந்திருக்கிறேன்' என்று அந்தப் புத்தகத்தை எடுத்து அப்படியே படித்துக் காட்டினேன்.

நண்பர் மனோகரன் அவர்கள் பேசிய ஆங்கிலப் பேச்சை அப்படியே படித்துக் காட்டினேன். அப்போது மனோகரன் சொன்னார். ''நான் We are for Hind என்று சொன்னது இந்திக்கு ஆதரவு என்ற கருத்தைத் தராது; நாங்கள் இந்திக்கு எதிர்ப்பாளர்கள் அல்ல என்ற கருத்தில்தான் சொன் னேன் என்று குறிப்பிட்டார். நான் உடனே சொன்னேன். ''மனோகரன் அளவிற்கு நான் படித்தவன் அல்ல; அவர் அள விற்கு ஆங்கிலம் பேசக்கூடிய ஆற்றல் பெற்றவனும் அல்ல; ஆனால் ''நாங்கள் இந்தி எதிர்ப்பாளர்கள் அல்ல'' என்று சொல்ல வேண்டுமேயானால், நான் ஆங்கிலத்தில் என்ன சொல்லியிருப்பே னென்றால், ''We are not against Hindi'' என்றுதான் சொல்லி யிருப்பேன் ''We are for Hindi'' என்று நிச்சயமாக சொல்லி யிருக்க மாட்டேன் என்று குறிப்பிட்டேன். அது மாத்திரமல்ல. கருணாநிதிதான் இந்திப் பிரச்சினையைக் கிளப்புகிறான் என்று கோள் சொல்லியதின் மூலம் நீங்கள் இந்திப் பிரச்சினையை தமி ழகத்தில் கிளப்பக்கூடாது என்றல்லவா அங்கு சொல்லியிருக்கி றீர்கள். அதுமாத்திரமல்ல. நீங்கள் பேசிய பேச்சிற்குப் பாராட்டு தெரிவித்து மத்திய உள்துறை அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்கள் நண்பர் மனோகரன் அவர்கள் இந்தியை வளர்ப்பதற் காக இங்கே பேசிய பேச்சை நான் பாராட்டுகிறேன். அவர் இங்கு பேசியதோடு நிற்காமல், தமிழ் நாட்டிற்குச் சென்று இதனைப் பேச வேண்டும். தமிழ் நாட்டில் சென்று பேசுவதோடு நிற்காமல், அவருடைய தலைவர் எம். ஜி. ராமச்சந்திரனுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும். அவருக்குச் சொல்வது மாத்திர மல்ல, தமிழ் நாட்டு மாணவர்களிடம் இந்தக் கருத்தைப் பரப்ப வேண்டும்; தமிழ்நாட்டு மாணவர்கள் எல்லாம் கிணற்றுத் தவளைகளாக ஆகக்கூடாது. எனவே மனோகரனைப் பாராட்டு கிறேன்'' என்று பிரம்மானந்த ரெட்டி அவர்களே பாராட்டினார் என்றால் எந்த அளவிற்கு அவர் அங்கே இந்தியை ஆதரித்துப் பேசியிருப்பார் என்பதைச் சொல்லத்தான் நான் சட்டமன்றத் தில் இதனைக் குறிப்பிட்டேன்.

இன்றைக்கு இந்தியை எதிர்ப்பதாகச் சொல்கிறார்கள். நான் வரவேற்கிறேன். இந்தி திணிக்கப்படுமானால் போராடுவோம் என்று சொல்கிறார்கள். வரவேற்கிறேன். ஆனால் ஒரு நாட்டி னுடைய உரிமைகளை, மொழியைப் பாதுகாப்பதில் வெறும் வாய் ஜாலங்கள் — வெறும் வார்த்தைகளிலே விளையாடும் சித்து விளையாட்டுகள் போதுமானவைகளல்ல ஏனென்றால் கடந்த காலம் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

மொழிக்கு ஆபத்து வந்த நேரத்தில் அந்த மொழி உரிமை களைக் காப்பாற்றுவதற்காக தங்களுடைய உறவுகளைப்பற்றி கவலைப்படாமல், அன்றைக்குப் போராடிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

மொழி உரிமைக்காக மனைவி என்ற உறவை, தான் பெற்ற பிள்ளை என்ற உறவை, தன்னை ஈன்றெடுத்த தாய் தந்தை என்ற உறவை எல்லாம் மறந்துவிட்டு தீக்குளித்து செத்த தங்கங்கள், சிங்கங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்திருக் கிறார்கள். ஆகவே உறவு என்று வருகிற நேரத்திலே உரிமை தலை தூக்குகிற காட்சியைப் பார்க்கிறோம்.

மொழிக்காக, நாட்டுக்காக என்கிற அளவிலே என்ற அந்த நிலையை உங்களுக்கு உணர்த்தி இன்னும் நேரம் இருந்திருக்குமே யானால் ஒரு மணி நேரம்கூட உங்களிடத்திலே உறவும் உரிமை யும் பற்றி பேசலாம். இருந்தாலும் நம்முடைய உறவு என்றென் றும் நீடிக்கும். அடுத்த முறை சந்திப்போம் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

வரலாற்றை
உணர்வதற்கு... !

(சேலம் அரசினர் பொறியியல் கல்லூரி, தமிழ்மன்றத்தில்
7-9-77 அன்று கலைஞர் ஆற்றிய இலக்கிய உரை)

ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18

வரலாற்றை உணர்வதற்கு!

கல்லூரி முதல்வர் அவர்களைத் தமிழ் மன்றத்தின் வரவேற் புரையில் முதல்வர் என்று குறிப்பிட்டபோது எனக்கு கொஞ்சம் சங்கடமாக இருந்தது. (சிரிப்பு) ஆனால் நானும் இப்போது முதல் வர்தான். இந்த கல்லூரிக்கு முதல் தடவையாக நான் வந்திருக் கின்ற காரணத்தால் நானும் முதல்வர்தான் என்பதை (கைதட் டல்) மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மன்றத்தின் சார்பில் அரசினர் பொறியியல் கல்லூரி யில் இலக்கியம் பற்றி நான் பேச வேண்டுமென்று அறிவித்திருக் கிறார்கள்.

நண்பர்கள் என்னிடம் இந்தக்கல்லூரிக்கு வரவேண்டுமென்று சொன்னபோது, ஐந்து நிமிட நேரம் மாணவர்களைக் கண்டுவிட்டு சென்று விடலாம் என்றுதான் குறிப்பிட்டார்கள். உள்ளே நுழைகின்ற நேரத்தில்தான் இலக்கியச் சொற்பொழிவாற்ற வேண்டும், அப்படித்தான் அழைப்பிதழில் போடப்பட்டிருக் கிறது என்றார்கள்.

இலக்கியச் சொற்பொழிவு ஆற்றுகின்ற நேரமா இது? (விழா நடந்தபோது சரியாக பகல் 12 மணி) நான் காலக்கட்டத்தைக் குறிப்பிடவில்லை. நேரத்தினைத் தான் குறிப்பிடுகின்றேன். இந்த நேரத்தில் இலக்கியப் பேச்சு என்றால், இலக்கியத்திலே எதைத் தேர்ந்தெடுப்பது என்று என்னியென்னிப் பார்க்கிறேன். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்றெல்லாம் வரு வதில் அனைத்தையும் விடுத்து, பாலை என்ற நிலம் பற்றித்தான் பேச வேண்டிய நேரம் இந்த நேரம். (கைதட்டல்)

ஆனாலும் கொளுத்துகின்ற வெயிலில் நானும் பாலை நிலம் பற்றிப் பேசினால் இன்னும் கொடுமையாக இருக்கும் என்பதால், பாலைக்கும் உங்களை அழைத்துச் சென்று, வேறு பல இடங்களுக்கும் உங்களை இட்டுச் சென்று, இலக்கிய சந்தையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறிப்புகளைக் காண்கின்ற வாய்ப்பினை நானும் நீங்களும் பெற்று உங்களிடமிருந்து விடைபெற்றுக் கொள் ளலாம் என்று கருதுகிறேன்.

இந்தக் கல்லூரியின் வயதைப் பற்றி முதல்வர், 11 வயது முடிந்து, 12 வயதில் இது ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். அவர் பேசுகின்ற தமிழில் ஓடிக் கொண்டிருக்கிறது என்றுதான் சொல்ல முடியும். சரியாகச் சொல்லவேண்டுமேயானால், 11 அகவை நிரம்பி, 12வது அகவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறவேண்டும். எனக்குள்ள ஆறுதல் எல்லாம் அந்த அளவு தமிழாவது பேசவேண்டும் என்கிற உணர்ச்சி கல்லூரி முதல்வருக்கு ஏற்பட்டிருப்பது வரவேற்கத் தக்க ஒன்று.

நம்முடைய அரசியல் இயக்கங்கள் தோன்றிய காலத்தில்— வெள்ளையர்களுடைய ஆதிக்கம் வேரூன்றியிருந்த நேரத்தில்— அதாவது நாற்பது அல்லது ஐம்பதாண்டு காலத்திற்கு முன்பு ஆங்கிலத்திலேயே பேசவேண்டும். தமிழில் பேசினால் தரக் குறைவு. அதுவும் பொதுமேடையில் தமிழில் பேசுவது பேசுகின்றவர்களுடைய மதிப்பைக் குறைக்கக் கூடிய ஒன்று என்று எண்ணிய நிலை இருந்தது.

இன்னும் சொல்லவேண்டுமேயானால், தமிழிலே பேச முனைந்தவர்கள் கூட, ஆங்கிலத்திலே நினைத்து, அப்படி நினைத்ததை தமிழிலே மிக்க சிரமப்பட்டு, பேசுகின்ற நிலை இரண்டாவது கட்டமாக இருந்தது. அவைகள் எல்லாம் மாறி, இன்று கல்லூரி முதல்வர் அவர்கள் இடையிடையே நான் ஆங்கில வார்த்தைகளை உபயோகிப்பதற்காக வெட்கப்படுகிறேன், என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லக் கூடிய அளவிற்கு, தமிழ் இயக்கம் இங்கு ஓங்கியிருக்கிறது என்பதை எண்ணியெண்ணி, அந்த இயக்கத்தை வளர்த்த அத்தனை பேருக்கும் வணக்கமும், நன்றியும் கூறவேண்டிய நிலைமையில் நான் இருக்கிறேன்.

தமிழ் இயக்கம் இடையில் தாழ்ந்து, நடையில் தளர்ந்து இன்று அதற்குரிய படை மிகுந்துவிட்ட காரணத்தினால், ஆங்கிலத்தில்தான் பேசுவோம் என்று அடம்பிடித்தவர்கள் எல்லாம் கூட, தமிழிலே பேசுகின்ற நிலைமையும் ஏற்ப்பட்டு, அப்படி முயற்சிப்பவர்களுக்கெல்லாம் ஊக்கமளிக்கின்ற வகையிலே முதல்வர் போன்றவர்கள் வேறு வழியில்லாமல் இடையிடையே ஆங்கிலத்தைக் கலந்து பேசினாலும், தமிழ் சொற்பொழிவை ஆற்ற வேண்டும் என்ற உணர்வைப் பெற்றிருப்பது பாராட்டி மகிழக் கூடிய ஒன்றாகும். நான் இதை வரவேற்கிறேன்.

ஆங்கில வார்த்தைகள் இடையிடையே வந்தன என்பதற்காக நான் வருந்திடவில்லை. அவர் தமிழ் மொழியிலே பேசுகின்ற இரண்டாவது கூட்டம் என்று தமிழ் மன்ற நண்பர்கள் எடுத்துச்

சொன்னார்கள். மூன்றுவது, நான்காவது கூட்டம் அவர் பேசி, அடுத்த ஆண்டு ஒருவேளை என்னை அழைத்து, அப்போதும் இவரே இங்கு முதல்வராக இருப்பாராஞல், என்னையும் உங்களையும் வெல்லக்கூடிய அளவிற்கு தமிழில் ஒரு நல்ல சொற்பொழிவை அவரால் ஆற்ற முடியும் என்று நான் நம்புகிறேன்.

ஏனென்றால், வெளி மாநிலங்களிலிருந்து தமிழகத்திற்கு வருகின்ற ஆளுநர்கள் எல்லாம் கூட, தாங்கள் தமிழ்க் கற்றுக் கொள்வதை ஒரு சிறப்பு அம்சமாக கருதி, தொடக்கத்திலே நான்கு வார்த்தைகளும், இறுதியிலே நான்கு வார்த்தைகளும் தமிழிலே பேசி, தமிழர்களுடைய ஆதரவைப் பெறுகிறார்கள் என்றால், அது தமிழ்மொழிக்கு உள்ள தனி சிறப்பாகும்.

வேறு எந்த மொழிக்காரர்களும், உலகம் சேர்ந்த ஒரு மொழி மாநாட்டினை நடத்தியது கிடையாது. உலகத் தமிழ்மாநாடு சிங்கப்பூரிலும், மலேசியாவிலும், தமிழகத்திலேயும், பாரிசிலும் நடைபெற்ற பிறகுதான் இப்போது வேறு மொழிகளுக்கான உலகத் தெலுங்கு மாநாடு, உலக மலையாள மாநாடு என்ற வகையில் எல்லாம் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன்.

அந்த வகையில் உலகத் தமிழ் மாநாடு நடத்துகின்ற அளவிற்கு நமக்கு ஆசை ஏற்பட்டது என்று கூறுவதைவிட, நமக்கு ஆற்றல் இருந்தது என்று கூறுவதுதான் உண்மையாகும். தமிழ் அவ்வளவு ஆற்றல் பெற்ற மொழியாகவும், தமிழ் மொழியிலிருந்து உலகத்திலே பல மொழிகள் சொற்களைக் கடன்பெற்றுச் சென்றிருக்கின்றன என்று கூறுகின்ற அளவிற்கு பெருமை கொண்ட மொழியாகவும் இருந்திருக்கிறது.

இன்றைக்கு ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சியில், அந்த விஞ்ஞான வளர்ச்சியோடு இணைந்து போகக்கூடிய அளவிற்கு தமிழ் வளர்ந்து இருக்கிறதா என்றால் இல்லை. அந்த வளர்ச்சியையும் எட்டக் கூடிய முயற்சியில் ஈடுபட்டாக வேண்டும். அந்தக் காரணத்தினால் தான் தமிழ் பயிற்றுமொழி ஆக்கப்பட வேண்டும் என்பதில் நாம் அழுத்தம் திருத்தமான கருத்து உடையவர்களாக இருக்கிறோம்.

வெளிநாடுகளுக்குச் சென்றபோது, நாம் இங்கே அமர்ந்து பேசுகின்றோம், உலக மொழி ஆங்கிலம் என்று குறிப்பிடுகிறோம். உலகத்திலே உள்ள எல்லா நாடுகளையும் இணைக்கின்ற மொழி ஆங்கிலம் என்று சொல்கிறோம். அது முழுமையான உண்மை

யல்ல என்பதை வெளிநாடுகளுக்குச் சென்று நேரில் கண்டால் தான் உண்மை விளங்கும்.

நான் ரோமாபுரியில் சிலநாள் தங்கியிருந்தபோது, எங்கே யாவது ஒரு இடத்தில் செய்திப் பத்திரிகை வாங்கி உலகச் செய்தி கனைத் தெரிந்து கொள்ளலாம் என்று எல்லா கடைகளிலும் ஆங்கில ஏடு ஒன்றினைத் தேடினேன். எந்தக் கடைகளிலும் ஆங்கில ஏடு கிடைக்கவில்லை. இத்தாலி மொழியிலே உள்ள ஏடுதான் அங்கே விற்கப்பட்டது. அதைப்போலவே பிரான்ஸ் நாட்டிலும், பிரெஞ்சு மொழியிலே உள்ள ஏடுதான் அங்கே விற்பனைக்குக் கிடைத்ததே தவிர ஆங்கில மொழியில் கிடைக்கவில்லை.

நம்நாட்டைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் இன்னமும் ஒரு தனி இடத்தினைப் பெற்றிருக்கிறது. ஆனல் அது ஆதிக்கமுள்ள இடத்தைப் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை. ஆதிக்கம் புரிந்த வர்கள் 1947 ஆம் ஆண்டே அகற்றப்பட்டுவிட்ட காரணத்தினல், ஆங்கிலத்திற்கு ஒரு தனி இடம் இருக்கிறது, ஆனல் தர்பார் நடத்துகின்ற இடத்திலே ஆங்கிலம் இல்லை.

தர்பார் நடத்துகின்ற இடத்திலே ஆங்கிலம் இருந்தால் தமி ழுக்கு ஆபத்து. எனவேதான் தர்பார் நடத்துகின்ற இடத்திலே இருக்கின்ற எந்த மொழியும், தமிழை ஆக்ரமித்து விடக் கூடாது என்பதில் நாம் மிக முனைப்பாக இருக்கிறோம். பொறியியல் கல்லூரி மாணவர்கள் இதைப் புரிந்து கொள்வீர்கள் என்று கருது கிறேன், அதனல்தான் இந்த அளவிற்கு சூசகமாக நான் அதைச் சொல்லி வைக்கிறேன்.

நான் அரசியலில் உங்களை அழைத்துச் செல்வதாக கருத வேண்டாம். அரசியல் என்பது மாணவர்களுக்கு விதிவிலக்கான ஒன்றல்ல. அரசியலை மாணவர்கள் தெரிந்து கொள்வது தேவை; அரசியலில் ஈடுபடுவது என்பது விதிவிலக்கு. அரசியலில் மாண வர்கள் ஈடுபடுவதற்கும் சில காலகட்டங்களை காந்தியடிகள் போன்றவர்கள் ஏற்படுத்தித் தந்து, மாணவர்களை அரசியலில் ஈடு படுங்கள் என்று அழைத்ததும் உண்டு. நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு மாணவர்கள் காந்தியடிகளால் அழைக்கப் பட்டார்.

ஒரு நாட்டின் சுதந்திரம் எந்த அளவிற்கு முக்கியமானதோ, அதைப்போலவே அந்த நாட்டு மொழியைக் காப்பாற்றுவதும் முக்கியமானது; அந்த வகையில்தான் மொழிக்கு ஒரு ஆபத்து வந்த நேரத்திலே மாணவர்கள் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டார்கள். அரசியலிலே ஈடுபட்டார்கள். சுதந்திரத்திற்காக, மொழி

உரிமைக்காக, மாணவர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தொடர்ச் சியாகக் கொண்டு எல்லாவற்றிலும் அரசியலில் ஈடுபடலாம் தாங்கள் பயிலுகின்ற காலத்தில் என்று பழக்கிக் கொள்ளக் கூடாது.

மாணவப் பருவத்தில் அரசியலைத் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் அண்ணு அவர்கள் அடிக்கடி மாணவர் களுக்கு போதித்த பொன்மொழியாகும். தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் மாணவப் பருவம் கடந்து, அரசியலைச் செயல்படுத்துகின்ற அந்தப் பருவத்தில், அதை செயலாற்ற வேண்டும்.

மாணவர்கள் வேலைநிறுத்தத்திலோ, கிளர்ச்சியிலுலோ ஒரு நாளை இழக்கிறார்கள் என்றால், அது சாதாரணமானதல்ல. ஒரு ஆலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டு, தொழிலாளி வேலை இழந் தால், பிறகு சமரசம் ஏற்படுகின்ற நேரத்தில், வேலை நிறுத்தம் செய்யப்பட்ட நாட்களுக்கும் சேர்த்து, ஊதியத்தைப் பெறக் கூடிய வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் வேலைநிறுத்தம் செய்கிற மாணவர்கள், வேலைநிறுத்தம் செய்த நாட்களில் தாங்கள் பயில வேண்டியவற்றை பெற முடியாமல் போய்விடுகிறது.

மாணவர்களிடம் இப்படிப்பட்ட அறிவுரைகளைக் கூறுகின்ற என்னைப் பார்த்து, மாணவர்களைத் தூண்டிவிடுகின்ற போர்வழி என்று இன்றும் சிலர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் நான் சொல்லவேண்டியதை உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் அதனைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டுமென்றும் மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

யார் என்ன பழி சுமத்திலுலும், மாணவர்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் தங்களுக்காக மாத்திரமல்ல, தமிழ்நாட்டிற்காக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டிய எதிர்கால ஒளிவிளக்குகள் என்ற வகையில் கல்லூரிகளை, கல்விக்கூடங்களை, உரிய நேரங் களில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலக்கியம் பற்றி பேசச் சொன்னீர்கள். இலக்கியத்தில் நான் அரசியலிலே வேதனைகளை அனுபவிக்கின்ற நேரத்தில் எல்லாம், அரசியலில் எழுத முடியாமல் என்னுடைய கை கட்டிப்போடப் பட்ட நேரத்தில் எல்லாம், துணைபுரிந்த ஒன்று இலக்கியம்.

நெருக்கடி காலத்தில் அரசியல் எழுதக் கூடாது என்று நான் தடுக்கப்பட்டபோது, வேறு என்ன தான் எழுதலாம் என்று நான் கேட்ட நேரத்தில் இலக்கியம் வேண்டுமானுல் எழுதலாம் என்று அனுமதிக்கப்பட்ட நேரத்தில், நான் இலக்கிய கடிதங்கள் பல

வற்றை எழுதியிருக்கிறேன். பிறகு தணிக்கை செய்த அதிகாரி ஒருநாள் என்னிடம், ''நீங்கள் அரசியலே எழுதலாம் போல் இருக்கிறது, ஏனென்றால் அதிலே நீங்கள் என்ன எழுதினீர்கள் என்று புரிகிறது. இலக்கியம் எழுதும்போது, நீங்கள் எதை மறை முகமாக எழுதுகிறீர்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை; ஆகவே நீங்கள் அரசியலே எழுதலாம் போல் இருக்கிறது'' என்றார்கள். பிறகு ஒருநாள், ''இரண்டுமே தயவுசெய்து எழுதவேண்டாம், கொஞ்சநாளைக்கு ஓய்வு பெறுங்கள்'' என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு நீதிமன்றத்திற்குச் சென்று, நான் அரசியல் கடிதமோ, இலக்கிய கடிதமோ எழுதலாம் என்கிற உரிமையைப் பெற்று, தணிக்கை அதிகாரிகளின் தணிக்கைக்கு உட்பட்டு அவைகள் எழுதப்பட வேண்டும் என்று நிபந்தனையை ஏற்றுக் கொண்டு, நான் எழுதிய இலக்கிய கடிதங்கள் பலவற்றை நீங்கள் படித்திருக்கக் கூடும்.

எனவே இலக்கியம் எப்படிப்பட்ட நேரத்தில் எனக்குக் கை கொடுத்தது என்பதை எண்ணியெண்ணிப் பார்த்து, நான் மகிழ்ச் சியடைகிறேன். 'கதிர்' என்கிற ஏட்டிலே நான் எழுதி வந்த ''குறளோவியம்'' கூட தணிக்கைக்கு உட்படநேர்ந்தது.

எவையெவை எல்லாம் தணிக்கைக்கு உட்பட நேர்ந்தது என்றால், குறளோவியத்தில் ஒரு காதல் ,பற்றிய குறளை எழுது கின்ற நேரத்தில், அவள் மாம்பழ மேனி படைத்தவள் என்று எழுதியிருந்தேன். அதைக்கூட தணிக்கை அதிகாரி அடித்து விட்டார். ஒருமுறை பேய், பூதம், பிசாசு என்ற இந்த நம்பிக் கைகள் தேவை தானு என்பது பற்றி ஒரு சர்ச்சையைக் கிளப்பி, இவைகள் எல்லாம் மனக் கற்பனைகள், மனிதனை காட்டுமிராண்டி யாக இருந்த நேரத்தில் அவனை மடக்குவதற்காகச் செய்யப்பட்ட தவறுனப் பிரச்சாரங்கள் என்பதை விளக்கி, பேய், பிசாசு, பூதம் இவைகளை நம்பத் தேவையில்லை என்று எழுதியிருந் தேன். அதையும் தணிக்கை அதிகாரி அனுமதிக்க மறுத்து விட்டார். தொலைபேசியில் அவரிடம் இதுஒரு சீர்திருத்தக்கட்டுரை தானே, மக்களுக்கு அறிவு போதிக்கும் கட்டுரை தானே, இதை ஏன் அனுமதிக்க மறுக்கிறீர்கள்? என்று கேட்டேன். அதிகாரி, ''நீங்கள் பேய், பூதம், பிசாசு என்று குறிப்பிடுவது, வேறு யாரையோ சொல்வது போலஇருக்கிறது. எனவே இதை நாங்கள் அனுமதிப்பதற்கில்லை'' என்று கூறிவிட்டார்.

இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்பட்ட போதெல்லாம் எனக்குக் கை கொடுத்து உதவிய இலக்கியத்தை நான் மறக்கவே மாட் டேன். இலக்கியம் களைப்புற்றுச் செல்கிற கடும் பயணத்தில்,

இலைப்பாறுகின்ற நிழல்காக அமைகிறது. அதேநேரத்தில் நம் முடைய மரபினை — வரலாற்றினை — பண்பாட்டினை நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால் தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை, வேறு எந்த மொழி இலக்கியத்திற்கும் இல்லாத பெருமை உண்டு. அது என்னவென்றால், தமிழர்களுக்கு ஒரு பெரும் குறை நமக்கு என்று ஒரு வரலாறு இல்லாத குறை தான். நமக்கென்று நிச்சயமாக ஒரு வரலாறு கிடையாது. வரலாறே கிடையாதா என்றால் வரலாறு உண்டு. வரலாறு இல்லாமலா வளர்ந்தோம்? வரலாறு உண்டு; ஆனால் வரலாற்று நூல்கள் கிடையாது. நம்முடைய வரலாற்றை நூல்களிலே தேடமுடியுமா என்றால் தேட முடியாது. நம்முடைய வரலாற்றை—சேரன் செங்குட்டுவன் வரலாற்றை, கரிகால் பெருவளத்தானு டையவரலாற்றை—ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுடைய வரலாற்றை, தக்கயாலங்கானத்து செருவென்றவனுடைய வரலாற்றை. வரலாற்று ஏடுகளிலே நாம் காணமுடியுமா என்றால் காணமுடியாது. சேரன் செங்குட்டுவனைகரிகால் பெருவளத்தானை சிலப்பதிகார இலக்கியத்திலே தான் காணலாம். எனவே சிலப் பதிகார இலக்கியம் தான் நமக்கு வரலாறுகவும் இருக்கிறது, இலக்கியமாகவும் இருக்கிறது.

தனித்த வரலாறு தமிழ்நாட்டிற்கு என்று, தமிழ்மொழிக்கு என்று எழுதப்படாத ஒரு பெரும்குறைக்கு நாம் ஆளானவர்கள்.

கழக அரசு இருந்த காலத்தில், டாக்டர் மு. வ. அவர் களுடைய தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதிலே ஆன் றோர்கள், சான்றோர்கள், தமிழ் அறிஞர்கள் பலரும் அங்கம் பெற்று, தமிழ்நாட்டு வரலாற்றை தொல்பழங்காலத்திலிருந்து எழுதிடவேண்டும் என்று ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டு, முதல் புத்தகத்தை முடித்திருக்கிறார்கள். தொல்பழங்காலம் என்ற அந்தப் புத்தகம் முடிவுற்று, அது அச்சாகி என்னுடைய முன் னுரையோடும், கல்வி அமைச்சராக இருந்த நாவலருடைய முன்னுரையோடும், அந்தப் புத்தகம் ஏற்கனவே வெளியிடப் பட்டிருக்கிறது.

தொல்பழங்காலத்திற்கு அடுத்தடுத்த காலங்களை எழுதுகின்ற முயற்சி, நின்றதற்குக் காரணம், மு. வ. அவர்கள் மறைந்தது ஒன்று, ஆட்சி கலைக்கப்பட்டது ஒன்று, ஆளுநர் ஆட்சியில் அதைப்பற்றி கவலைப்படாத காரணம் ஒன்று.

ஆனல் நேற்றையதினம் இன்றைய கல்வி அமைச்சர் அவர்கள் ஒரு கூட்டத்தில் சொன்னதாக பத்திரிகையில் பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழ்நாட்டின் வரலாறு சரியாக எழுதப்படவில்லை; அதற்காக ஒரு குழு அமைக்கப் போகிறேன் என்று அறிவித்திருப்பதைப் பத்திரிகையிலே பார்த்தேன்.

நான் இந்த இலக்கிய கூட்டத்தின் சார்பாக, புதிய கல்வி அமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்வேன். அதை நீங்கள் புதிதாகச் செய்ய வேண்டியதில்லை. ஏற்கனவே கழக அரசு செய்யத் தொடங்கி இடையில் நிற்கிற பணிதான் அது; அதைத் தொடர்ந்தாலே போதும்; ஏனென்றால் டாக்டர் மு. வ. அவர்களுடைய கைபட்டு, அவருடைய ஆற்றலால், அவரோடு இணைந்திருந்த தமிழ்ப்புலவர்களுடைய வரலாற்றுச் சிற்பிகளுடைய ஒத்துழைப்போடு, உருவான தொல்பழங்காலம்என்ற புத்தகத்தை அடுத்து வரவேண்டிய சரித்திரப்புத்தகம் தமிழ்நாட்டைப் பற்றி பல அத்தியாயங்களாக, பகுதிகளாக வரவேண்டியிருக்கிறது. எனவே தான் நான் அந்த வரலாறுகளை எல்லாம் கூட எதிலேயிருந்து எடுக்கவேண்டுமென்றால், மொஹஞ்சதாரோ, ஹாரப்பா போன்ற இடங்களைக் கிண்டி கிளறி தோண்டியெடுத்து, திராவிட நாகரீகம் இங்கே பரவியிருந்தது. என்று கண்டுபிடித்து எடுத்துக் காட்டுவதைப் போல நம்முடைய இலக்கியங்களை எல்லாம் ஆய்வுக்கு உட்படுத்தி, அந்த இலக்கியங்களிலிருந்து வரலாற்றுப் புதையல்களை எடுத்து, அந்த வரலாறுகளை தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமையில் நாம் இருக்கிறோம். இருந்தாலும் கடந்த காலத்திலும் சரி, இனி வருகின்ற காலத்திலும் சரி, அந்தப் பணி தொய்வு விழாமல், தொடர்ந்து நடைபெற நாமனைவரும் பாடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம்.

இலக்கியத்திலே தான் வரலாறு பின்னி பிணைந்து கிடக்கின்றது. செங்குட்டுவன் வடபுலம்வரை சென்றான், கனகவிசயன் தலையிலே கல்லையேற்றினான், கண்ணகிக்கு சிலைவடிக்க இமயத்திலே எடுத்த கல் அது, அந்தக் கல்லைக் கொண்டு வந்து, வஞ்சி மூதூரில் கண்ணகிக்கு சிலை வடித்தான், சிலை வடித்த நேரத்தில் இலங்கையிருலிந்து கயவாகு மன்னன் விழா காண வந்திருந்தான். பாண்டியன் அந்த விழா காணச் சென்றிருந்தான். சோழன் போயிருந்தான் என்பவையெல்லாம் சிலப்பதிகாரத்திலே கிடைக்கின்ற வரலாற்றுக் குறிப்புகளேயல்லாமல், தனி வரலாறுகளாக நமக்குக் கிடைத்திடவில்லை.

இன்னமும் கழக அரசு இருந்த காலத்திலே மதுரை மாவட்டத்தையும், கேரள எல்லையையும் இணைக்கின்ற ஒரு பகுதியில் மங்கலதேவி ஆலயம், என்றிருப்பது, அந்தக் காலத்தில் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை வடித்தானே அந்த இடம்தான், என்று ஆராயப்பெற்று, அது தமிழ்நாட்டு எல்லைக்குள்ளே தான் இருக்கிறது. மலைப்பகுதியில் இருக்கிற காரணத்தால் தமிழ் நாட்டு எல்லையா? கேரள எல்லையா என்று தெரியாமல், ஒரு சிக்கலான பிரச்சினை இன்று எழுந்திருக்கிறது.

ஆனால் வரைவுகளைப் பார்க்கின்ற நேரத்திலும், எல்லைக் கோடுகளை வரைந்திருப்பதைப் பார்க்கின்ற நேரத்திலும், தமிழகம் கேரளம் என்று மொழிவாரி மாநிலங்களாக பிரிக்கப்பட்ட நேரத்தில், அந்த ஆலயம் தமிழ்நாட்டு எல்லைக்குள் தான் அந்த மலைப்பகுதியில் வரையப்பட்டிருக்கிறது. எனவே இது நமக்குச் சொந்தம், என்று தமிழகத்தில் கழக அரசு இருந்த காலத்தில் கேரள முதலமைச்சருக்கு எழுதினேம். அவர்கள் அதுபற்றி கவனிப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசுக்கு அறிவித்தோம், அவர்களும் கவனிப்பதாகச் சொன்னர்கள். ஆனால் இதுவரையில் அது கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

அது கேரள எல்லைக்கே சொந்தமாகிவிடாமல், அது தமிழ் எல்லைக்கு உட்பட்டது என்பதை நிலைநாட்ட வேண்டிய அவசியத்திலே நாம் இந்தத் தருணத்திலே இருக்கிறோம். மங்கலதேவி கோவில் என்றாலும்கூட, அங்கேயிருக்கிற சிலை அமைக்கப்பட்ட அந்தக் கல் இந்தப் பகுதியிலே காணப்படுகின்ற கல் அல்ல என்றும், இன்னும் சொல்லப்போனால் அந்த மலைப்பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட கல் அல்ல என்றும், அது இமயமலையிலே உள்ள கல்லுக்கும், அந்தக் கல்லுக்கும் நல்ல தொடர்பு உண்டு என்றும், அதை ஆராய்ந்த கரந்தை புலவர் ஒருவர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

நான் இன்னும் கூட ஒரு உண்மையைச் சொல்வேன். இப்போது அந்த மங்கலதேவி கோவிலிலே இருக்கிற சிலை தலையில்லாத ஒரு சிலை. அந்த அளவிற்குத் தான் அங்கே இருக்கிறது. அதை ஆராய்ந்த புலவர் பெருமானார் விழுந்து கிடந்த அந்தத் தலையை அப்போதே தமிழ்நாட்டிற்கு எடுத்து வந்துவிட்டார் எனக் கேள்வி ! ஆக தலை தமிழ்நாட்டிலே இருக்கிறது. தலையற்ற மற்ற பகுதிகள் இன்றைக்கு அந்த மலையில் இருக்கிறது. அதுவும் தமிழ் நாட்டு எல்லைக்குள் தான் இருக்கிறது, அந்த ஆலயமே நமக்குச் சொந்தமாக வேண்டும், என்கிற வாதம் நம்முடைய வாதம். அந்த உரிமைக்காக நாம் வாதாடிக் கொண்டிருக்கிறோம்.

அவைகள் எல்லாம் சாதாரணமான விஷயங்களாகத் தெரிய லாம்.

ஒரு இடிந்த கோயில், அதற்குச் செல்ல வேண்டுமென்றால் கூட ஏழெட்டு மைல் நடந்து செல்ல வேண்டும், அப்படிச் சென்று அந்தத் தேவியைக் காண வேண்டுமா என்றெல்லாம் யாராவது கேட்பார்களானால், இதைவிட பல மைல்தூரம் நடந்து பல கஷ்டங்களை அனுபவித்து, யானை சேட்டை, மற்றுமுள்ள மிருகங் களின் சேட்டை இவைகளுக்கெல்லாம் ஆளாகி, சபரிமலையிலே இருக்கிற ஐயப்பனைத் தரிசிக்க பக்தர்கள் போவதைப் போல, ஒரு சரித்திரக் கால சின்னத்தைச் சந்திக்க நாம் ஏன் செல்லக் கூடாதா? ஏன் அந்த ஏழு மைல் மலைப்பாதைக்கு அதை நம்முடையதாக ஆக்கிக் கொண்டு நல்ல சாலை வசதி செய்யக் கூடாது என்பதை யெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு இனத்தை வீரமுள்ள இனமாக ஆக்க உணர்ச்சியுள்ள இனமாக ஆக்க அந்த இனத்திற்குரிய வரலாறுகளும் வரலாற்றுச் சின்னங்களும்தான் முக்கியமானவை.

காவிரிப்பூம்பட்டினம் அழிந்து ஒழிந்து கடல் கொள்ளப் பட்டு, அங்கே சில மீனவ குடும்பங்களின் குடிசைகள் தான் மிச்சம் என்ற அளவிற்கு இருந்த காவிரிப்பூம்பட்டினத்தை மாணவப் பருவத்தில் சென்று நான் பார்த்தேன். அப்போது என்னுடைய நெஞ்சிலே நிழலாடியது காவிரிப்பூம்பட்டினம், சிலப்பதிகாரத்திலே நாம் படித்த அந்த எழில்மிகுபட்டினம், மருவூர்ப்பாக்கமும், பட்டினப்பாக்கமும், நாளங்காடியும், பூதச் சதுக்கமும், தோரணவாயிலும், கொற்றப்பந்தரும், முத்துப் பந்தரும் என்றெல்லாம் சிலப்பதிகாரத்தில் வர்ணிக்கப்பட்ட அந்த எழில்மிகு ஏற்றமிகு இடங்கள் எல்லாம் இருந்த காவிரிப் பூம்பட்டினம் இங்கேயிருந்து பத்துக்கல் தொலைவில் கடலுக்கடி யில் இருக்கிறது. ஆனால் அந்தக் காவிரிப்பூம்பட்டினத்தை மீண்டும் தமிழ்நாட்டு மக்கள் பார்க்கக் கூடிய காலம் வராதா? அதனுடைய மாதிரியையாவது காணக்கூடிய காலம் வராதா என்று அந்த மாணவ உள்ளம் அன்றைக்கு ஏங்கியது. அப்படி ஏங்கிய நேரத்தில் அந்த மாணவன் தமிழ்நாட்டின் முதலமைச்ச ராக ஒரு காலத்தில் வருவான் என்றோ, அப்படி வந்த பிறகு அந்தக் கனவை நிறைவேற்றுவான் என்றோ அந்தக் கனவு தான் புதிய பூம்புகாராக உருவாகியிருக்கிறது என்றோ அப்போது எண்ணிடவில்லை. ஆனால் அதைச் செய்ய முடிந்தது.

அதைப் போலத்தான் நான் பதவிப் பொறுப்பை ஏற்ற பிறகு தான் பாஞ்சாலங்குறிச்சியையே காண நேரிட்டது.

பாஞ்சாலங்குறிச்சியை கண்ட போது ஒரு புழுதி மேட்டை காட்டி என்னிடம் சொன்னார்கள். இது தான் கட்டபொம்மன் கோட்டை இருந்த இடம் என்று சொன்னார்கள். கோட்டையை இடித்து வெறிபிடித்த வெள்ளையர்கள் அதை உழுது போட்டு, புழுதி மேட்டாக ஆக்கிப் போட்டுவிட்டு போய்விட்டார்கள் என்று தான் சரித்திரத்திலே படித்தோம்.

கட்டபொம்மனுடைய வாரிசுதாரர்கள் என்னிடம் எடுத்துக் காட்டினார்கள். மேடிட்டுக் கிடந்த அந்த இடத்தை அகழ்ந்து பார்த்தால் கீழே அடித்தளங்கள் காணப்பட்டன. பெரியபெரிய மேடைகள் காணப்பட்டன. சுவர்களுக்கான அமைப்புக்கள். அஸ்திவாரங்கள் காணப்பட்டன. பீங்கான் பாத்திரங்கள் காணப் பட்டன. பெரிய வெட்டரிவாள்கள், ஈட்டிகள், இவைகள் துருப் பிடித்துக் காணப்பட்டன. பெரிய பீடம் ஒன்று காணப்பட்டது. அது தான் கட்டபொம்மன் அமர்ந்து கொலுமண்டபம் நடத்து கின்ற இடமாக இருக்க வேண்டும் என்றுபட்டது. இப்படி பல பகுதிகளும் அகழ்ந்து எடுக்கப்பட்ட பிறகு, அந்த இடத்தினை அப்படியே பழமையின் சின்னமாக வைத்துவிட்டு, அதிலே ஒரு கோட்டையைக் கட்டினால் தொன்மை கெட்டுவிடும், அந்தத் தொன்மை அப்படியே இருக்க வேண்டும் என்ற உணர்வோடு, அந்த பழைய இடத்தை அப்படியே விட்டுவிட்டு, முள்வேலி போடச் சொல்லிவிட்டு, பக்கத்திலே ஒரு மாதிரி கோட்டை, கட்டபொம்மனுடைய கோட்டை அங்கே கட்டியிருக்கிறோம் என்று சொன்னால், இன்றைக்கு அதை யாரும் பாராட்டாவிட் டாலும் அதற்கு யாரும் நன்றி தெரிவிக்காவிட்டாலும், ஐம்பது அல்லது நூறுண்டு காலத்திற்குப் பிறகு அவைகள் எல்லாம் வரலாற்றில் இடம்பெறக் கூடிய நிகழ்ச்சிகள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

வள்ளுவருக்கு ஒரு கோட்டம் தேவையா என்று கேட்கிறார் கள். அப்படி கேட்பவர்களும் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள். அப்படிக் கேட்பவர்களை தமிழ்நாட்டிலே ஆதரிப்பவர்களும் சிலர் இருக்கிறார்கள்.

வள்ளுவருக்கு ஒரு கோட்டம் தேவையா என்று கேட்கிறார் கள்.

வள்ளுவருக்கு ஒரு கோட்டம் தேவை என்று யாரும் எண்ண வில்லைதான். ஏனென்றால் ஆலயங்கள் அமைப்பதில், பெரும் பெரும் கோயில்களை எழுப்புவதில். நம்முடைய மூவேந்தர்கள் காட்டிய அக்கறை வள்ளுவருக்கு ஒரு நினைவுச்சின்னம் எழுப்புவ திலே என்ன காரணத்தினாலோ காட்டத் தயங்கினார்கள்.

வள்ளுவனுக்கு இருந்த நினைவுச் சின்னம் மைலாப்பூரிலே இருந்த ஒரு சிறிய ஆலயம் தான். அந்த ஆலயத்திலே கூட வள்ளுவனுடைய சிலையை ஏதோவொரு பயங்கரமான சிலையாக உட்கார வைத்து, அங்கே இது தான் வள்ளுவர் கோவில் என்று வணங்கிக் கொண்டிருந்தார்கள்.

அர்ச்சனை, அபிஷேகம் இவைகள் எல்லாம் அந்த வள்ளுவர் கோவிலுக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தன. அந்த வள்ளுவன் ஆலயத்தையும் பாழாக்கிவிடாமல், அதை நம்பிச் சென்று பூஜிப் பவர்கள் பூஜிக்கட்டும் என்று அதற்கும் திருப்பணி செய்துவிட்டு, அதே நேரத்தில் ஏறத்தாழ ஐம்பது இலட்ச ரூபாய்ச் செலவில் வள்ளுவருக்கு ஒரு கோட்டத்தை கழக அரசு காலத்திலே எழுப் பினேம். அது திறக்கப்படுகிற நேரத்திலே கழக அரசு இல்லை. இன்னும் பதினைந்து நாள் கழக அரசு நீடிக்கப்பட்டிருக்குமே யானால் வள்ளுவர் கோட்டத்தின் திறப்புவிழா உலகமெங்கும் கண்டு வியக்கத்தக்க அளவிற்கு புகழ்பெற்ற விழாவாக ஆகி யிருக்கும்.

இடையில் ஏற்பட்ட ஆட்சிக் கலைப்பின் காரணமாக அந்த விழா நினைத்தவாறு சிறப்புற அமையவில்லை வள்ளுவர் கோட் டம் கட்டிய நாங்களே இன்னும் அதில் நுழைந்து பார்க்கவில்லை. வள்ளுவர் கோட்டத்தில் நாட்டப்பட்ட அடிக்கல்லேகூட அகற்றப்பட்டுவிட்டது. அடிக்கல் அங்கு இருந்திருக்குமானால் ஒருநாளைக்கு ஆயிரம் பேர் செல்கிறார்கள். செல்கின்றவர்கள் அந்த அடிக்கல்லைப் பார்த்துவிட்டு, பேசாமல் போய்விடுவார்கள். இப்போது அங்கே அடிக்கல் இல்லாத காரணத்தினால், பேசிக் கொண்டே போகிறார்கள். எனவே அடிக்கல் இல்லாதது எந்த விதமான இழப்பையும் தரவில்லை. அடிக்கல் இல்லாத காரணத் தினால் இது யார் கட்டியது? எந்தக் காலத்தில் கட்டப்பட்டது என்று பேசுகின்ற வாய்ப்பு அங்கே வருகின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

நாம் இன்றைக்கு கல்லணையைப் பார்க்கிறோம். கல்லணைக்கு அருகாமையில் எத்தனையோ மதகுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த மதகுகளைத் திறந்த இந்தக் காலத்திய அமைச்சர்களுடைய பெயர்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கே கட்டப்பட்டிருக்கின்ற பெரிய கல்லணையில், இதைக் கட்டியவன் கரிகால் பெருவளத்தான் என்று அவனுடைய காலத்திலே போடப்படவில்லை. ஆனால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இதைக் கட்டியவன் கரிகால் பெருவளத்தான் என்று நாம் சொல்லத் தவறவில்லை — அடிக்கல் இருந்தாலும் இல்லா

விட்டாலும், திறப்புவிழா கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறோம். எனவே பெயரில் ஒன்று மில்லை.

நான் இவைகளை எல்லாம் சொல்லக் காரணம், பூம்புகார் இலக்கியத்தில் இருப்பது, வள்ளுவர் கோட்டமும் குறளில் இருப் பது, பாஞ்சாலங்குறிச்சி நாடோடி இலக்கியம் என்ற அளவிற்கு இருப்பது. இப்படிப்பட்ட இலக்கியங்கள் மங்காமல் மறையாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய தலைவர் அண்ணு அவர்களுடைய ஆசையாகும்.

1967ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பு மூதறிஞர் ராஜாஜி, காயிதே மில்லத், சிலம்புச் செல்வர், கல்யாண சுந்தரம் ஆகி யோர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு, விருகம்பாக்கம் மாநாட்டில் அண்ணு அவர்கள், ''நாங்கள் ஆட்சி பொறுப்பு ஏற்க வேண்டுமென்று ஏன் விரும்புகிறோம் என்றால், தமிழர் களுடைய மரபு காப்பாற்றப்பட, இலக்கியங்கள் மங்காமல் மறையாமல் பாதுகாக்கப்பட, வரலாறுகள் பேணப்பட, தமிழ னுடைய கீர்த்திக் கொடி புவனமெங்கும் பறந்திட, நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர வேண்டுமென்று கருதுகிறோம்'' என்று சொன்னார்கள். ஆகவே அந்த இலட்சியம் மங்காமல், மறையாமல் காப்பாற்றுகின்ற பணியிலே நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே ஈடுபட்டோம். ஆட்சி பொறுப்பிற்கு வராததற்கு முன்பும் அந்த இலக்கியங்களைக் காப் பாற்றுகின்ற பணியிலே ஈடுபட்டோம். ஆட்சிப் பொறுப்பிலே இல்லாத இந்த நேரத்திலும் இலக்கியங்களைக் காப்பாற்றுகின்ற பணியிலே நாம் ஈடுபட்டு இருக்கிறோம்.

நான் தொடக்கத்திலேயே சொன்னேன். நம்முடைய இலக் கியங்கள் வரலாற்றை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றன என்றாலும், நமக்கென்று தனியாக வரலாறுகள் இல்லை என்று லும்கூட, நம்முடைய இலக்கியங்களை மிஞ்சிய இலக்கியங்கள் வேறு மொழியிலே இல்லை என்று கூறினால் அது மிகையாகாது. அது ஏதோ காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று சொல்வதைப்போல ஆகாது. அது உண்மையும்கூட.

சுப்ரமணிய பாரதியார், ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்'' என்று பாடினார். இந்தியாவிலே உள்ள இலக்கியங்களை எடுத்துக்கொண்டால்கூட, காளிதாசனுடைய சாகுந்தலமானாலும், ரகுவம்சமானாலும் இவை கள் எல்லாம் அவனுடைய படைப்புக்களில் மிகச் சிறந்த இலக் கியங்களாகும்.

காளிதாசன் ஒரு இடத்திலே ஒரு உவமை காட்டுகிறான். நான் தொடக்கத்தில் பாலையைப் பற்றிச் சொன்னேனே; அந்தப் பாலையின் கொடுமையை வர்ணிக்கிறான். வயல்கள் எல்லாம் வெடித்துக் கிடக்கின்றன; அந்த வெயிலின் கொடுமையை அந்தப் புலவர் எவ்வளவு அழகாக வர்ணிக்கிறான் என்றால், காளிதாசனுடைய உவமையின் நயம், ஆற்றல் அத்தனையும் புரியும். வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் தன்னுடைய தலையை கீழே போட முடியாமல், நாகப்பாம்பு ஒன்று தன்னுடைய வால் ஒன்றை மாத்திரம் கீழே ஊன்றிக்கொண்டு, தன்னுடைய உடல் முழுவதையும் மேலே தூக்கிக்கொண்டு படமெடுத்து நிற்கிறதாம், வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் நிற்கிறதாம். நிழல் கிடைக்காமல் அங்குமிங்கும் ஓடி கடைசியாக பாம்பின் நிழல் என்று தெரியாமல், அந்த நிழலுக்கு அடியில் வந்து தவளை உட்கார்ந்திருக்கிறதாம். வெயிலின் கொடுமையால் பாம்புக்கு தன் நிழலில் தவளை இருப்பது தெரியவில்லை. தவளைக்கு அது பாம்பின் நிழல் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு அருமையான உவமையை காளிதாசன் சொல்கிறான். அது பாலையின் கொடுமைக்கு காளிதாசன் தந்த உவமை.

அதே நேரத்தில் கலித்தொகையில் தமிழ்நாட்டுப் புலவன் ஒரு உதாரணம் சொல்கிறான். இரண்டு மான்கள், பாலை நிலத்தில் ஆண் மான் ஒன்று, பெண் மான் ஒன்று, இந்த இரண்டு மான்களும் சென்று கொண்டிருக்கின்றன. தாங்க முடியாத வெயில்; பாலை நிலத்தில்; அந்த நேரத்தில் ஆண் மானால் சமாளிக்க முடிகிறது. பெண் மானால் அந்த வெயிலை சமாளிக்க முடியவில்லை. உடனே ஆண் மான் என்ன செய்கிறது தெரியுமா? அது நின்றுகொண்டு, அந்த நிழலில் பெண் மானை படுத்துக் கொள்ளச் சொல்கிறது. அதைத்தான் தமிழ்நாட்டுப் புலவன் அழகாகச் சொல்கிறான்.

''இன்நிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்தளிக்கும் கலை''

இனிய நிழல் இல்லாத காரணத்தால், தன்னுடைய துணைவியான பெண் மானுக்கு, தான் வெயிலில் நின்றுகொண்டு அந்த நிழலை அளிக்கிறதாம், அந்த ஆண் மான், கலைமான்; காளிதாசன் காவியத்தில் இரண்டு விரோதிகளைச் சந்திக்க விடுகிறான். தவளையையும், பாம்பையும் சந்திக்க விடுகிறான். அங்கே ஒன்றை யொன்று உணர்ந்தால் தவளை ஓடியிருக்கும், அல்லது பாம்பு தவளையை கவ்வியிருக்கும். ஒன்றையொன்று உணராத காரணத்தினால் அங்கே நிழல் ஏற்படுகிறது. இங்கே தமிழ் இலக்கியத்தில் ஒன்றையொன்று உணர்ந்து நிழல் தரப்படுகிறது.


மு. ச. அறக்கட்டளை

ஒரு காதல் காவியம் பாலை நிலத்திலே தீட்டப்படுகிறது. மாலை நேரத்திலே அல்ல. காதல் மலருகின்ற நேரமும் மாலைநேரம். மாலை நேரத்திலே மலருகின்ற காதலைவிட பாலை நிலத்திலே கொடிய வெயிலிலே மான்களிடம் அந்தக் காதல்; ஆனல் மனி தர்களிடம் அப்படி ஏற்படுமா என்றால், ஒரு ஆணை பெண்ணை வெயிலில் செல்கிற நேரத்தில் ஆண் வேண்டுமானல் கீழே படுத்துக்கொண்டு, பெண்ணை நிற்கச் சொல்லி புடவை முந்தாணி யால் கொஞ்சம் சூரிய ஒளியை மறைத்துக்கொள் என்று சொல் வான். ஆனல் மான் இனத்திலே உள்ள காதலையும், அந்தக் காதல் உணர்வையும் பாலை நிலத்திலே காட்டுவதின் மூலமாக எவ்வளவு அழகாக அந்தப் புலவன் விளக்கியிருக்கிறன் என்ப தற்காகத்தான் நான் காளிதாசனேடு நம்முடைய தமிழ்நாட்டுப் புலவனைப் போட்டிக்கு நான் விடவில்லை. அவன் நினைத்தது எப்படி இவன் நினைத்தது எப்படி என்பதை எண்ணிப் பார்ப்பதற் காகத்தான் நான் இதனை எடுத்துக் காட்டுகின்றேன்.

இப்படிப்பட்ட இலக்கியச் சுவை ஏராளமாக மிளிர்ந்த தமிழ் நூல்கள் நம்மிடம் நிறைய இருக்கின்றன.

நம்முடைய தமிழ் மன்றங்கள் ஆங்காங்கு பொறியியல் கல்லூரியானலும், வேறு கல்லூரியானலும், அங்கெல்லாம் எத்தனை மாணவ மன்றங்கள் இருந்தாலும் — அதிலே தமிழ் மன்றங்கள் தனிப் பணியாக இந்த இலக்கியப் பணியை ஆற்றிட வேண்டும். ஏனென்றால் நமக்கென்று இருக்கின்ற இலக்கியங்கள், நமக்கென்று இருக்கின்ற வரலாறுகளாகும். அந்த வரலாறுகள் நம்முடைய உணர்ச்சியை — வீரத்தை — ஊக்கப்படுத்தக் கூடிய வைகளாகும்.

அவைகளை பொன்னேபோல் போற்றிப் பாதுகாக்க வேண்டி யது நம்முடைய கடமையாகும் என்றுகூறி, விடைபெற்றுக் கொள்கிறேன்.



7—8—77ம் நாளன்று நடைபெற்ற கோவை அண்ணு சிந்தனையாளர் பேரவையின் 7-ம் ஆண்டு விழாச் சிறப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய தலைவர் கலைஞர் அவர்களிடம் பேரவையின் தலைவர் வழக்கறிஞர் என். ஆறுமுகம் நிதி வழங்குகிறார்.